www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாதஇதழ்

சுவடி : 7.11 திருவள்ளுவர் ஆண்டு 2050 | 14.03.2019 - 13.04.2019 | ISSN : 2195-6480




## குற்றமற்றவன் முதற் கல்லெறியக் கடவான்

## தமிழீழவிடுதலைப்போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA

TKS BEST FOODS

வாடிக்கையாளர், நண்பர்களுக்கு.....
எமது புதுவருட நல்வாழ்த்துகள்

# TKS
# BESTFOODS

Rheinische Strasse 79
44137 Dortmund
Mobile : 0151 25 300 400
fax: 0231/95046882
tel: 0 231/ 95046883

## புதுவருட
## சிறப்பு மலிவு விற்பனை

ஏப்ரல் 11, 12, 13
ஆகிய மூன்று தினங்கள் மட்டுமே!

கொள்வனவுக்கு முத்துக்கள்
கையிருப்பு உள்ளவரை மட்டுமே!

சித்திரை மாதத்தில்
வீட்டிற்குத் தேவையான அனைத்து
பொருட்களையும் வியக்க வைக்கும்
விலையில் அள்ளித்தர
காத்திருக்கும் உங்கள் நிறுவனம்

வெகுவிரைவில்...

TKS இன் வாடிக்கையாளருக்கான
புதிய பரிமாணம்
காத்திருங்கள்! என்றும் உங்களுடன்...

www.tks-bestfoods.de
info@tks-bestfoods.de

# DER VERBESSERTE SUPER-TARIF




ortel MOBILE




**19** **99**€[15] /4 Wochen

**ஒரே சிம்மில் இருந்து...**
**யேர்மனிக்கு முற்றிலும்**

# இலவசம்


**NEU: Deutschland Flat**

**ஐரோப்பா, இந்தியா**
**மேலும் பல நாடுகளுக்கு**
**250 நிமிடங்கள்**

**4GB Internet**

- 250 Minuten aus Deutschland in 50 weitere Länder
- Internet Flat ~~3 GB~~ 4 GB
- Surfen&Telefonieren in der EU
- Deutschland Flat

**ஐரோப்பிய நாடுகளில் இருந்து பயன்படுத்தலாம்**
**4GB முடிந்தால் மீண்டும் 9 யூரோக்களுக்கு பெற முடியும்**



**Nur Festnetz



AKARAM
# அகரம்
மாதாந்த இதழ் Monthly Magazine

14.பங்குனி 2019 13 - சித்திரை 2019
சுவடி / ISSUE 7.11

**தலைமை ஆசிரியர்**
திரு. **த. இரவீந்திரன்**

**உதவி ஆசிரியர்**
திரு. **வன்னித்தம்பி**

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்னை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

**European Tamils Union e.V.**
**PO. BOX 4153, 59037 Hamm**
**Germany**

**Tel: 00 49 176 47 11 87 11**

Email: editor@akaram.eu

ISSN 2195-6480
www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

# நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும்,**
**விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும்**
**எமது நன்றியும், வணக்கமும்....**

ஐ.நா. மனித உரிமை ஆணைச் சபையில், ஈழத்தமிழ் இன அழிப்புப் போர் தொடர்பான பல தீர்மானங்கள், கடந்த 10 வருடங்களாக விவாதிக்கப் பட்டு வருகிறது. இப்பொழுதும் கூட தீர்மானங்கள் பற்றியும், அவை தொடர்பான இலங்கை அரசுகளின் பொறுப்புக் கூறல் தொடர்பான சர்ச்சை மட்டுமே பேசப்பட்டு வருவதை காண்கிறோம். முடிவு என்னவோ... தமிழ் மக்களுக்கு நன்கு பழக்கப்பட்ட, ‘விடாக் கண்டன் கொடாக் கண்டன்’, கதையாகத்தான் நீண்டு கொண்டு போகிறது.

இந்த இழுபறியில் உண்மைப் பிரச்சினை மறக்கடிக்கப் பட்டு, இலங்கை அரசின் காலப் போக்கடிப்பு பற்றியும், அதனைச் சமாதானப்படுத்தி ஏதாவது ஒரு பதிலைப் பெற்று, கதையை முடித்து விடும் எத்தனிப்புகள்தான் தெரிகின்றன. இலங்கை அரசும், நீதி பேசும் நாடுகளுக்கு தமிழர் நிலங்களையும், வளங்களையும், விலையாகத் தாரை வார்த்துக் கொடுத்து, அந்த நாடுகள் மூலமாகவே தனக்குச் சார்பான தீர்வுகளைப் பெற்று, தமிழர் தரப்பை ஏமாற்றுவதாகத்தான் தெரிகிறது.

**அப்படித்தான் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் அவர்களை வைத்தே மாகாண எல்லைகள் மீளாக்கம் என்கிற போர்வையில், தமிழரின் பாரம்பரிய நிலங்களை சிங்கள மாகாணங்களுடன் இணைத்து, மாபெரும் தமிழர் நில அபகரிப்பை மிகச் சாதாரணமாக செய்து, தமிழரின் பூர்வீக தாயகத்தின் பெரும் பகுதியைத் தனது ஆக்கியது.**

உலகத் தலைவர்கள் மத்தியில் விக்ரோறியா மகாராணியால் பாராட்டுப் பெற்ற பொன். இராமநாதன் என்ற மாபெரும் கல்விமான், ஆங்கிலப் பேச்சில் புலமை கொண்ட மாமேதை. எட்டாம் வகுப்பையே எட்டாத அரை வேக்காடு டி.எஸ். சேனா நாயக்காவின் ராஜதந்திரத்தின் முன்னால் படித்த முட்டாளாக ஆக்கப்பட்டார்.

**ஒரு முறை அல்ல, 3 முறைகள் ஏமாற்றப்பட்ட வரலாறு உள்ளது. அப்படியான ஒரு ஏமாற்று வேலையாகத்தான் தமிழ்த் தலைவர்கள் டொனமூர் அரசுத் திட்டம், சோல்பரி அரசுத் திட்டம் என்கிற பொறிகளில் தமிழினம் சிக்க வைக்கப்பட்டது. “பட்டால் அறிவான் சண்டாளன், மழை பெய்யா விட்டால் அறிவான் விவசாயி” என்கிற தமிழ் பழமொழியைத் தெரிந்தும், பல முறை பட்டும், படிக்காத முட்டாள்களாக எமது தலைவர்கள் நடந்து கொண்டனர். இப்பொழுதும் நடக்க முற்படுகின்றனர்.**

எனவே, அகரம் கொஞ்சம் கடுமையான வகையில் இப்பதிவை முன்வைக்கிறது. இப்பொழுதும் தமிழினத்தை வழிநடத்தும் படித்த முட்டாள்கள், கடந்த 10 வருடமாக பல ஏமாற்றுக் கதைகளை தமிழ் மக்களுக்குச் சொல்லிக் கொண்டே எல்லா முறைகளிலும் தமிழ் மக்களை ஏமாற்றியும், சிங்கள - இந்திய - அமெரிக்க - ஐரோப்பிய அரசுகளின் ஏவல் பேய்களாக, எம் இனத்தை அழித்து வரும், குலத்தைக் கெடுக்கும் கோடரிக் காம்புகளாகச் செயற்படுகின்றனர்.

**70 ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழினம் போராடிக் காத்து வந்த தமிழ் தேசியம், அமிர்தலிங்கம், சம்பந்தன் சுமந்திரன் போன்றவர்களின் சுயநலத்தால் இன்று நொந்து நூலாகி, பஞ்சாகிக் கிடக்கிறது. தமிழின அழிப்புப் போருக்கான நீதியும், நிவாரணமும் இல்லாமல் வீடும், நாடும் இழந்து, தமிழினம் நடுத் தெருக்களில் அலைகிறது. படையும், கொடியும், முடியும் கொண்டு உலகறிய ஆண்ட இனம், இன்று காக்கை வன்னியன் பரம்பரையால், கஞ்சிக்கும் சிங்களவனிடம் கை ஏந்தி வாழும் நிலைக்கு வந்து விட்டது. இனியும் இப்படியான ஏமாற்றுத் தலைமையிடம், எம் இனத்தின் தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பில் விட்டு வைக்க முடியாது.**

எம் இனத்தின் மீது தொடுக்கப் பட்டது ஒரு சர்வதேச ஆதரவுடன், இலங்கை - இந்திய - அமெரிக்க அரசுகள் சேர்ந்து நடத்திய ஒரு இன அழிப்புப் போர். தமிழர்களின் 30 ஆண்டுகால அமைதி வழி அரசியல் உரிமைப் போராட்டங்கள், அரசியல் ஒப்பந்தங்கள் அனைத்தையும் ஆயுதப் படைகள் கொண்டு அடக்கித் தமிழர் போராட்டத்தை, ஆயுதப் போராட்டமாக மாற வைத்ததே சிங்கள அரசுதான்.

**1983 கருப்பு ஜூலை கலவரத்தை தொடக்கி, “போர் என்றால் போர், தமிழனை அழிப்பது சிங்கள மக்களுக்கு சந்தோசம் என்றால், அதையும் செய்வேன்” எனக் கத்தியதும், இலங்கையின் ஜனாதிபதி ஜே.ஆர். அதை ஆயுதப் போராட்டமாக மாற்றியதும், இந்திய அரசுதான்.**

பயங்கரவாத தடைச் சட்டத்தை ஏற்படுத்தி, தமிழர்கள் அனைவரையும் பயங்கரவாதிகள் ஆக்கியதும் ஜே.ஆர்.அரசுதான். பின்னர் இந்த அரசுகளும், அமெரிக்க பிரத்தானிய அரசுகளுடன் இணைந்து, தமிழ் இன அழிப்பை சாட்சிகள் இல்லாத போராக நடத்தி, இன்றுவரை தமிழின மத கலாச்சார குடிப் பரம்பல் அழிப்புகளை நடத்தி வருவதும், இதே அரசுகளும் ஐ.நா.வும்தான்.

**இதற்கு முறையான தீர்வாக, தமிழ் மக்களுக்கு நிலையான பாதுகாப்பும், நிரந்தர சமாதானத்துடன் கூடிய அரசியல் தீர்வு ஒன்றாகத்தான் இருக்க முடியும். “தும்பை விட்டு வாலைப் பிடிக்கும்” ஏமாற்று விளையாட்டாக ஐ.நா. மனித உரிமைச் சபைத் தீர்மானங்களும், ஆய்வு அறிக்கைகளும், அவற்றுக்கு இலங்கை அரசைப் பொறுப்புக் கூறவைக்கும் கூத்துகளும், கடந்த 10 வருடங்களாக அரங்கேற்றப் படுவதைக் காண்கிறோம்.**

“நான் அடிக்கிற மாதிரி அடிப்பேன், நீ அழுகிற மாதிரி அழு” என்பது போன்ற கூத்தை நிறுத்த வேண்டிய காலம் வந்து விட்டது. இனியும் இவை போன்ற கூத்துகளோ, நாடகங்களோ அண்ணாவி மாரின் மோடி வித்தைகளோ வேண்டாம்.

நாடு கடந்த தமிழ் ஈழ அரசோ, உலகத் தமிழர் பேரவையோ அல்லது வேறு எந்த தமிழர் தரகுக் குழுக்களோ ஆனாலும், ஐ.நா. மனித உரிமை ஆணைச் சபைத் தீர்மானங்களைப் பற்றிப் பேசுவதை நிறுத்தி விட்டு, சர்வதேசப் போர்க் குற்ற விசாரணையும், அதன் கீழ் மக்கள் கருத்து வாக்கெடுப்பும், அதன் அடிப்படையிலான சர்வதேச அங்கீகாரத்துடன் கூடிய அரசியல் தீர்வும்தான் பேசப்பட வேண்டிய விடயங்களாக இருக்க வேண்டும்.

இதற்கு முதன்மைக் கோரிக்கையாக, வடக்கு கிழக்கு மாகாணங்களின் கட்டுப்பாடு, ஐ.நா. சபையின் அமைதிப் படையின் கீழ் கொண்டு வரப்பட்டு, ஒரு நிலை மாறுகால ஆட்சிக் கட்டமைப்பின் கீழ் தமிழ் மக்களின் பாதுகாப்பும், அன்றாட வாழ்க்கையும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தமிழன் என்றாலே ஏமாளி, ஏமாற்றப் படுபவன் என்கிற வகைக்குள் வைத்து எண்ணப் படத் தக்க இனமாக வரலாற்றில் செயற்படுபவன் என்கிற தோற்றப்பாடு காணப் படுகிறது.

இந்தக் கதை 2019ல் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, புதிய வரலாறு படைக்கும் தலைமுறையாக, நாம் எழ வேண்டும். தமிழ் தேசியம் ஒன்றுதான் எமது தாரக மந்திரம் ஆகட்டும்.

**ஆசிரியர், அகரம் குழுமம்**






# அழிக்கப்படுகிறது தமிழ் ஈழம் அழிக்கிறது சிங்களமும், அகில உலகமும்!

**த. எதிர் மன்ன சிங்கம்**

சிங்களமும், இந்தியாவும், சீனாவும் தமிழரின் தாயகத்தை துண்டாடி, அபகரித்துப் போகும் கனிம வளங்கள் மற்றும் இராணுவ கேந்திர மூலோபாயங்கள் ஒரு புறத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. மறுபுறத்தில் சிங்கள படை வளங்களைப் பயன்படுத்தி, தமிழரின் நிலங்களை முன் எப்பொழுதும் நடை பெற்றிராத அளவுக்கு சிங்கள, பௌத்த பிக்கு காடையர்கள் தமிழர் நிலத்தில் வலிந்து, சிங்கள மக்களைக் குடியமர்த்தி, தமிழரின் தாயகத்தை தமதாக்கி வருகின்றனர்.

இதில் நல்லாட்சி நாயகன் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் நேரடிக் கட்டுப்பாட்டில் செயற்படுத்தப்படும் மாகாவலி நதி நீர்த் திட்டங்களின் கீழ் கிழக்கு மாகாணத்திலும், வடக்கு மாகாணத்திலும் தமிழரின் பிரதேசங்களைத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் மூலம் கபளீகரம் செய்யும் கைங்கரியம், தமிழ் ஈழ விடுதலைப் புலிகளை அழித்த பின்னர் கடந்த பத்தாண்டுகளாக வெகுச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

இலங்கை இராணுவத்தால் அபகரிக்கப்பட்ட காணிகளில் தெற்கில் இருந்து வரும் பிக்குகளின் தலைமையில் குடியேற்றப்பட்டு வரும் சிங்களவர்களின் எண்ணிக்கை தினம் தினம் வடக்கிலும், கிழக்கிலும் பெருகி வருகின்றன. பாதிக்கப்பட்ட பொது மக்கள் எவ்வளவு தான் அமைதி வழிப் போராட்டங்கள், ஆர்பாட்டங்கள் உண்ணா விரதங்கள் என வாரம், மாதம் கடந்து, இரண்டு வருடங்கள் கடந்தும், மைத்திரியிடமும், ரணிலிடமும் நேரடியாக முறையிட்டும் கூட தமிழ் மக்களுக்கான நீதி கிடைக்கவில்லை.

கொக்கிளாயில் முகத்துவாரம் பகுதியில் தமிழ் மக்களின் காணிகளை பலவந்தமாக அபகரித்து, புத்த விகாரையும் கட்டி, சிங்கள மக்களையும் சட்டத்தை மீறிக் குடியமர்த்தி, எக்கிய ராஜ்ஜியத்தை நிலை நாட்டிவரும் ஸ்ரீ திஸ்ஸபுர குணரத்ன தேரரை பத்தரமுல்ல ஸ்ரீ சீலரத்னதேரர் குடியேற்ற வாசிகளுக்கு அன்பளிப்புகளை வழங்கிய காட்சியை இந்தப் படம் காட்டுகிறது.

“விளக்கு மாத்துக்குப் பட்டுக் குஞ்சம் போல” இந்த பிக்குகளின் பெயர்கள்



'குணரத்ன' என்றும் 'சீலரத்ன' என்றும் பரம யோக்கியம் நிறைந்த பெயர்களோடு இத்தகைய அடாவடித் தனங்களைச் செய்வது, சிங்களத்தின் கை வந்த கலை என்பதையே காட்டு கிறது.

எங்கள் மக்களின் குறைகளை சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் செவி சாய்த்து ஆறுதல் சொன்னாலும், சொல்வார்களே அல்லாமல் எங்கள் அரசியல் தலைமைப் பொறுக்கிகள் யாரும் கேட்க மாட்டார்கள் என்கிற உண்மையை, இப்பொழுது எமது மக்கள் நன்றாகத் தெரிந்து கொண்டு விட்டார்கள்.

புலிகளை அழித்து, மக்களைக் காத்த கூட்டம் கடந்த 10 வருடங்களாக நாட்டில் எமது மக்கள் படும் பாடுகள் எதையும் அறியாத மண்டுகளாக, திண்டு கொழுத்துத் திரிகிறார்கள். இந்த இலட்சணத்தில் ரணிலின் பதவியை மீட்டுக் கொடுப்பது ஒன்றே தமது பிறவிப் பயனாக பெற்றுக் கொடுத்தவர்கள் இன்று, புலிகளை விமர்சனம் செய்து, மக்கள் மனதில் கடுப்பேற்றும் வேலையை மிகக் கச்சிதமாகச் செய்து வருகின்றனர்.

சிங்கள அரசையும், அரச படைகளையும் போர்க் குற்றங்கள் தொடர்பாக சர்வ தேச விசாரணைக்கு உட்படுத்தித் தண்டிக்க வேண்டும் எனப் பல வெளிநாடுகளும், அரச சார்பற்ற அமைப்புகளும், மனித உரிமை ஆர்வலர்களும் கடந்த 10 வருடங்களாகக் கரடியாகக் கத்தி வரும் நிலையிலும், எங்கள் தரகுக் கூட்டமைப்புத் தலைவர்கள் சிங்களத்தின் விருப்பத்துக்கு இசைவாக பொறுப்புக் கூறல் என்றும், இன நல்


NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE

நீங்கள் ஒரு முக்கிய நிகழ்வை சிறப்பாகக் கொண்டாடப் போகின்றீர்களா? பிறந்தநாள் விழா, திருமண விழா போன்றவைகளா? நாங்கள் உங்கள் விருப்பங்கள் மற்றும் எண்ணங்களுக்கு அமைவாக இலங்கை மற்றும் இந்திய உணவு வகைகளை அந்த நாட்டு முறைப்படி தயாரித்து வழங்குகிறோம்!

உங்களுக்கு உதவி தேவைப்படுகின்றதா? எவ்வித சிரமமும் இன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்!




**திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள்!**

**நிழல்படம் மற்றும் வீடியோ!**

**விநியோகம் மற்றும் பரிமாற்றம்!**

**Kontakt: Siemensstr. 25, 40721 Hilden**





**Rufen Sie uns an:**
**Tel.: 0211/7691974 | Mobile: 0173/7424955**






இணக்கம் என்றும், அவற்றைச் செய்ய கால நீட்டிப்புகளை ஜெனிவா ஐ.நா. மனித உரிமை ஆணைச் சபையில் பெற்றுக் கொடுத்து, குறுக்கால வண்டி ஓட்டி தப்பிக்க வைத்தனர்.

தப்பிக்க விட்டாலும் மன்னித்து விடலாம், தமிழ் மக்களின் உடனடித் தேவைகளையாவது நிறைவு செய்து, ஆறுதல் கொடுத்தார்களா என்றால்? அதுவும் கிடையாது. வடக்கு மக்களின் சுதந்திரம், நிம்மதி, வாழ்வாதார வளங்களையும் தெற்கில் இருந்து வரும் காடையர்களே முப்படைகளின் பாதுகாப்போடு அனுபவிக்கும் நிலையில், தமிழத் தேசிய அரசியலின் தேவை அவசியமாகிறது.

ஆனால், அதையும் காலில் போட்டு மிதிக்கும் விதமாகப் புதிதாக த.தே.கூ. தலைமை பெற்றுள்ள சுமந்திரனின் புலிகளைப் பற்றிய சீண்டல்களும் தான்தோன்றித் தனமான தமிழ் இன விரோதக் கருத்துகளும் மன்னிக்க முடியாதவை. முன்னாள் தலைவர் சம்பந்தன் மிகக் கேவலமாகச் செயற்பட்ட போதும், புலிகளை விமர்சிப்பதைக் குறைத்து, வாய் மூடி மௌனமாக இருந்து தப்பித்துக் கொண்டார். மன்னாரில் தினமும் தோண்டி எடுக்கப்படும் அப்பாவிப் பொது மக்களின் எலும்புக் குவியல்களைக் கூட கவனிக்காமல், புலிகள் மாத்தையாவோடு 200 போராளிகளைக் கொன்றார்கள் எனப் பேச, எந்த அளவுக்கு அவர் மனதில் வக்கிர உணர்வுகள் குவிந்து கிடக்கின்றன? என அறிய முடிகிறது.

இப்பொழுது வெளியாகி உள்ள முகநூல் பதிவு ஒன்று புத்தளம் பிரதேசத்தில் கொள்கலன்கள் வழியாக அந்நிய தேசத்து மின்னணு மற்றும் உயிர் வாழ்வுக்கு ஆபத்தான, சூழல் மாசுகளை ஏற்படுத்தும் ஆபத்துகள் நிறைந்த மருத்துவ மின்னணுக் கழிவுகள் உள்ளிட்ட குப்பைகள், வெட்ட வெளிகளில் கொட்டப்படுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

மேலும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சினால் மேற் கொள்ளப்படும் புத்தளம் சேரக்குழி பிரதேசத்தில் கொழும்பிலிருந்தும் சிங்கப்பூர் உள்ளிட்ட 62 நாடுகளின் மருத்துவ மற்றும் மின்னணுக் கழிவுகள் கொட்டப்படுவதாகவும் அவற்றால் கர்ப்பினிப் பெண்களும், குழந்தைகளும் பல வகையான தீராத வியாதிகளால் அவதிப் படுவதாகவும் அறிய முடிகிறது.

ஒரு சிறிய மழையினால் வழிந்தோடிய வெள்ளம், சிவப்பு நிறமாக கடலில் கலந்து, கடலும் சிவந்து காணப்பட்டது. இதனால் இலங்கையின் இரண்டாவது பெரிய உப்பளமாகத் திகழும் உப்பளத்தின் வருங்காலம், ஆபத்தானதாக முடியவும், மீன் பிடி, இறால் வளர்ப்பு பாதிப்பினால் 5,000 வரையான குடும்பங்களின் வாழ்வாதாரமும் கேள்விக்கு உள்ளாகி விடும். இத்தனை நல்ல பல பலன்களுக்கு காரணமாக விளங்குபவர் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க.

தமிழர் தாயகத்தைப் பறித்தும், அழித்தும், நாசப்படுத்தும் வேலைகள் ரொம்ப நல்லாகவே நடக்கின்றன. அதற்கும் எங்கள் ஒட்டுண்ணி அரசியல்வாதிகளும் சிறப்பாகவே ஒத்துழைத்து வருகின்றனர்.

LINUS media

IPTV

## ஐரோப்பாவின் முன்னனி IPTVகளை வாங்குவதற்கும், புதுப்பிப்பதற்கும் எம்மைத் தொடர்பு கொள்ளவும்

chitram 4K — 4K mini ULTRA HD



நீங்கள்
வீட்டில் இருந்தபடியே
Online மூலம் எம்மிடம்
புதுப்பித்துக் கொள்ள முடியும்

**மேலதீக தொடர்புக்கு... 0031 621 604 168**

**www.linusmedia.nl 0031 620 897 414**

40+ TAMIL CHANNELS

40+ HINDI CHANNELS

10 CARTOON CHANNELS

15+ ENTERTAINMENT CHANNELS

15+ SPORTS CHANNELS

20+ MALAYALAM CHANNELS

15+ TELUGU CHANNELS

Swiss Life
Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

## சுவிசில் சொந்த வீடு வாங்க விரும்பும் உறவுகளே!

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்



**Sägestrasse 79**
**3098 Köniz**

Telefon: 031 915 00 50
Telefax: 031 915 00 60
Handy: 079 889 60 65

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch


Cicero Member ID 15787
www.cicero.ch

So fängt Zukunft an.



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF















# தமிழ் அறிஞர்கள் 14



### தலைமை ஆசிரியர் பதவியைத் துறந்து தமிழ்ப்பணி ஏற்ற அறிஞர்...

# வே. அகிலேசபிள்ளை

பண்டைக் காலத்திலிருந்து சைவத் தமிழரின் தாயகமாக அமைந்திருந்தது திருக்கோண மலையாகும். இது அகத்திய முனிவரோடும், இலங்கை வேந்தனான இராவணனோடும் தொடர்புபட்ட பெருமைக்குரிய மண்ணாகும்! அது மாத்திரமல்ல கிரேக்கம், உரோமம், பாரசீகம், அரேபியர் முதலிய வணிகப் பெருமக்களால் பண்டைய காலம் தொட்டு அறியப்பட்டிருந்த இயற்கைத் துறைமுகத்தைக் கொண்டுள்ளதோடு, திருஞான சம்மந்தர், திருநூவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், சேக்கிழார் சுவாமிகள், உமாபதி சிவாச்சாரியார், அருணகிரிநாதர் முதலிய தமிழ்நாட்டுக் குரவர்களால் பாடப்பெற்ற பெருமையும் கொண்ட பிரதேசமாகும்!.

பெருமைக்குரிய இந்த மண்ணிலே புகழோடு வாழ்ந்த, இராசக்கோன் முதலியாரின் வழித்தோன்றலான வேலுப்பிள்ளை என்பவருக்கு, 1853ம் ஆண்டு மாசி மாதம் பிறந்தவரே அகிலேச பிள்ளை ஆவார். அறிஞர் குமாரவேற் பிள்ளை அவர்களிடம் நீதி நூல்களையும், நிகண்டையும் கற்றுவந்த இவர், இயல்பாகவே மிகச் சிறந்த நினைவாற்றலைக் கொண்டிருந்தார். இதனால் ஏடுகளில் இருந்த பண்டைய நூல்கள் பலவற்றை ஆசிரியரிடம் பாடம் கேட்டு, மனதில் பதிந்து கொண்டார்.

அகிலேச பிள்ளை அவர்களின் சிறிய தந்தை முறையான, திருவாளர் தையல் நாயகம் பிள்ளை என்பவர் தமிழ்ப் புலமைகளோடு, சமஸ்க்கிருதம் மற்றும் ஆங்கில மொழிகளிலும் அறிவுமிக்கவராகவும் இருந்தார். அகிலேசப் பிள்ளை அவர்களின் அறிவாற்றலை தெரிந்து கொண்ட தையல் நாயகம் பிள்ளை அவர்கள் இவருக்கு உயர் கல்வியைப் போதிக்கும் பொறுப்பை, தாமே ஏற்றுக் கொண்டார். பண்டைய இலக்கண, இலக்கிய நூல்களை ஆழமாக கற்பித்த அவர் சமஸ்க்கிருதம், ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் ஆரம்பத்தில் இருந்தே கற்பித்தார்.

முறையான கல்வியை ஒழுங்காகப் பெற்றுக் கொண்ட அகிலேசபிள்ளை அவர்கள், பாடசாலைப் படிப்பை முடித்து, பின்னர் ஆசிரியர்

பயிற்சியைப் பெற்று, 1872ம் ஆண்டு ஆசிரியராக நியமிக்கப் பட்டார். கற்பித்தலில் இவர் காட்டிய திறமையின் அடிப்படையில் ஒருசில ஆண்டுகளிலேயே தலைமை ஆசிரியராக பதவி உயர்த்தப்பட்டார். தமிழ் மாணவர்களுக்கு சைவ, சமய அடிப்படையில் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்பதில் இவருக்கு தீவிர நாட்டம் ஏற்பட்ட காரணத்தால், 1882ம் ஆண்டளவில் தனிப்பட்ட முறையிலும், தமது தமிழ்ப் பணியில் ஈடுபடலானார்.

தமது வீட்டிற்கு அருகில் இருந்த ஆலயமொன்றைத் தமது பணிக்குரிய மையமாகக் கொண்டு தமிழ் இளைஞர்களுக்கு சமய அடிப்படையிலான கல்வியை ஊட்டி வந்ததோடு, தமது தமிழ்ப் பணியையும் ஆற்றி வந்தார். பாடசாலை ஆசிரியராக, தலைமை ஆசிரியராக ஒரு பாடசாலை எல்லைக்குள் தமது பணியினை முடக்கிட விரும்பாத அகிலேசபிள்ளை தாம் ஆசிரியப் பணியாற்றத் தொடங்கிய பத்து ஆண்டுகளிலேயே, அப்பதவியைத் துறந்து, தமது பதவியை விரிவுபடுத்த ஆரம்பித்தார். இதன் காரணம் அந்நிய ஆட்சியின் கீழ் அவர்களுடைய மொழி, சமயம் என்பவற்றின் தாக்கம் தமிழ் மொழிக் கல்வியையும், சைவ மதக் கல்வியையும் பாதித்து விடாது, அவற்றைப் பேணிக் காப்பதையும், தமிழ் மக்கள் உயர்வாக மதிக்கும் சமய ஆசார சீலங்களையும், கலாச்சாரப் பண்பாட்டு விழுமியங்களையும் வளர்தெடுப்பதையும், தமது முக்கிய கடமைகளாக எடுத்துக் கொண்டார்.

தமிழ் சிறார்களுக்கு முறையான தமிழ் மொழிக் கல்வியையும், சமயக் கல்வியையும் போதனை மூலமும், செயல் முறையிலும் போதித்து வந்த அகிலேசபிள்ளை அவர்கள், சைவ ஆச்சாரங்களையும் பழக்கி வந்தார். இவர் மேற்கொண்ட பணிகள் யாழ்ப்பாணத்திலே ஆறுமுகநாவலர் அவர்கள் மேற்கொண்ட பணிகளை ஒத்திருந்ததால், திருக்கோண மலையின் நாவலரென இவரும் மதிக்கப்பட்டார்!.

சமய அடிப்படையிலான கல்வி அளிக்கும் பணியோடு, நூல்களை பதிப்பித்து வெளியிடும் பணியிலும் இவர் ஈடுபடலானார். ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை ஆகியோர் எவ்வாறு பண்டைத் தமிழ் நூல்களைத் தேடிப் பெற்று, அவற்றை பரிசோதித்து, வெளியிட்டார்களோ? அதே வழியில் அகிலேச பிள்ளையும், தாம் வாழ்ந்த திருகோணமலைப் பிரதேசத்தின் பழம் தமிழ் ஏடுகளைத் தேடிப் பெறுவதிலும், அவற்றைப் பரிசோதித்து, வெளியிடுவதிலும் இரவு பகலாக ஈடுபடலானார்.

மகாவலிகங்கை திருக்கோண மலையில், கடலோடு கலக்கும் கரையில் உள்ள அகத்தியர் ஸ்தாபனம் என வழங்கப்படும் திருக்கரை சையம் பதியில் எழுந்தருளி இருக்கின்ற, சிவபெருமான் மீது பாடப்பட்டது திருக்கரசைப் புராணமாகும்!. இப்புராணத்தின் ஆசிரியர் யாரோன திட்டவட்டமாகக் கூறமுடியா விட்டாலும் சைவ சந்தானப் புலவர்களுள் ஒருவரால் அது பாடப் பட்டிருக்கலாம் என ஒரு சிலர் நம்புகின்றனர்.

ஏட்டில் இருந்தவாறே இப்புராணத்தை ஆடி அமாவாசைக் காலங்களில், சைவத் தமிழ் மக்கள் திருக்கரசையம் பதியில் கூடி, இரவு முழுவதும் விரதம் அனுஸ்ட்டிக்கும் போது, அவர்களின் நலனுக்காக நீண்ட காலமிருந்தே புராணபராயனமாகப் படித்து வந்தனர். அப்புராணம் அழிந்தொழிந்து போகாதபடி, அதனை நூலுருவில் வெளியிட்டால், அது மக்களுக்கு பயனுள்ளதாக இருக்குமென்பதால், பத்துக்கும் மேற்பட்ட பழைய ஏடுகளைத் தேடிப்பெற்று, அவற்றைப் பரிசோதனை செய்து, கையெழுத்துப் பிரதியாக ஒரு பிரதியைத் தயார் செய்து, தனது நண்பரான சுண்ணாகம் அ. குமாரசுவாமிப் புலவரைக் கொண்டு, அதற்கு விளக்கவுரையும் எழுதுவித்து, யாழ்ப்பாணம் மயிலிட்டி அச்சுயந்திர சாலையில் 1893ம் ஆண்டு பதிப்பித்து, வெளியிட்டார். அப்புராணத்தில் இருந்து ஒரு செய்யுள் கீழே தரப்படுகின்றது.

**“தண்ணமர் சாலி முத்தும்**
**தடங்கடல் இப்பி முத்தும்**
**வண்ணவொண் பணில முத்தும்**
**வரையறா வேோல முத்தும்**
**கண்ணமர் கரும்பின் முத்தும்**
**ககனமஞ் சீன்ற முத்தும்**
**வெண்ணில வில்லாப் போது**
**மிகுநிலாக் கொழிக்கு மன்றே”**

நிலாவொளி இல்லாத வேளையில், பலவகையான முத்துக்கள் ஒலிகாலுமென்று கூறப்படும் கற்பனைச் சிறப்பு, படிப்போர்க்கு இன்பம் தரவல்லது. திருகரசைப் புராணமே அகிலேச பிள்ளை அவர்களால் பரிசோதிக்கப் பட்டவற்றுள் பதிப்பிக்கப்பட்டு, வெளியிடப்பட்ட முதலாவது நூலாகும்.

இவர் 1899ம் ஆண்டில் எழுதி வெளியிட்ட “திருக்கோணமலை வைபவம்” என்னும் நூல் திருக்கோண மலையின் வளத்தினையும், அது ஏன் ‘சிவபூமி’ என்று அழைக்கப்படுகின்றது? என்பதற்கான காரணத்தையும், அழகிய தமிழ் நடையில் அமைந்திருந்தது. இந்த நூலை அகிலேசபிள்ளை அவர்களின் இரண்டாவது மகனான அளகைக்கோன் அவர்களால் 1950ம் ஆண்டு

# சுவிஸ்வாழ் எம் தமிழ் உறவுகளுக்கு ஓர் அறிய வாய்ப்பும் ஓர் விழிப்புணர்வும்

## சுவிஸ்வாழ் நம் தமிழ் உறவுகளே!

**உங்கள் சம்பளத்தில் கழிக்கப்படுகின்ற தொகை அல்லது ஏற்கனவே கழித்த தொகையை சரியானதாக கழிக்கப்பட்டுள்ளதா? என்பதை நாம் உங்களுக்கு சரிபார்த்து திறம்பட செய்து தருவோம். தற்போது நீங்கள் சுவிசில் தொழில் செய்து கொண்டிருக்கிறீர்களா? அல்லது தொழில் செய்த பின் வேலை இழந்தவரா? அல்லது ஓய்வூதியம் பெறுபவரா? அல்லது தொழில் செய்த கணவரை அல்லது மனைவியை இழந்தரவா? நீங்கள் உடனே எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.**

எமது சகல தமிழ் உள்ளங்களின் பணங்களை சரியான முறையில் கழிக்கப்பட்டுள்ளதா? என்பதை நாம் அறிந்து உங்களுக்கு மீளப்பெற வழிவகை செய்து தருவோம். உங்களுக்கு எந்த வித பணமும் இல்லை என்றால் இவை சம்பந்தமாக நாங்கள் உங்களிடம் எந்தவித கட்டணங்களும் அறவிடமாட்டோம் என்பதை மிக உறுதியாக தெரியப்படுத்துகிறோம். அத்துடன் உங்கள் பண விபரங்கள் சரியானதாக உள்ளது என்பதை எங்களின் உத்தரவாத படிவத்தையும் உங்களுக்கு இனாமாக அனுப்பி வைப்போம். ஆகவே சுவிஸ்வாழ் உங்கள் உறவுகளுக்கு எங்களின் இந்த நல்ல திட்டத்தை அறியப்படுத்துமாறும் நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.



பண விபரங்கள் மற்றும் அதன் நிலைமையும் சம்பந்தப்பட்டவர்களுக்கு மாத்திரம் தெரியப்படுத்துவோம். அத்துடன் உங்கள் விபரங்களை நாம் மிக இரகசியமாக கையாளுவோம் என்பதையும் அறியத்தருகிறோம். இத்திட்டத்தில் நீங்கள் இன்றே இனணந்துகொள்ளுங்கள். விண்ணப்பப் படிவத்திற்கும் மற்றும் இதர விபரங்களுக்கும் நீங்கள் மின்னஞ்சல் மூலமாக அல்லது எமது விலாசத்திற்கு எழுத்து மூலமாக தொடர்பு கொள்ளவும்.

அறிவித்தல் : சுவிஸ்சலாந்தில் வேலை செய்து விட்டு பின் வேறு நாடுகளில் வாழும் எம் உறவுகளின் சம்பளத்தில் கழிக்கப்பட்ட கழிவுத்தொகையை அவர்களுக்கு நேரடியாக கிடைக்கப்பெற வழிவகைகளை நாம் சுமார் 24 வருடங்களாக திறம்பட செய்து கொண்டிருக்கிறோம் என்பதையும் தங்களுக்கு அறியத்தருகிறோம்.

**DHARMARAJAH CONSULTING**
தர்மராஜா கன்சல்டிங்

www.dharmarajahconsulting.com
E.Mail : dharmarajah.consulting@hotmail.com

**Dharmarajah Consulting Switzerland**
**Mr.Pasupathy Dharmarajah**

**Haldenwiesli 19a, CH 8207 Schaffhausen, Switzerland.**

நீங்கள் வியர்வை சிந்திய பணம், தாயகத்தில் ஒருவேளை கஞ்சிக்கு வழியில்லாதவர்களுக்கு போனால் என்ன?

கோணேஸ்வரர் அச்சகத்தில் பதிப்பித்து, வெளியிடப்பட்டது.

கண்டி நகரை ஆட்சி செய்த நரேந்திர சிங்கராசன் என்னும் மன்னன், பேரில் மட்டக்களப்பைச் சேர்ந்த திருக்கோயில் என்னும் இடத்தில் வசித்து வந்த, பிராமணர் ஒருவரால் பாடப்பட்டதாகக் கூறப்படும்; "நரேந்திரன் சிங்கராசன்" என்னும் படைப்பினை பரிசோதித்து, பிழைகளைத் திருத்தி 1908ம் ஆண்டில் அகிலேச பிள்ளை அவர்களே வெளியிட்டுள்ளார்!. இதேபோல திருக்கோண மலையைச் சேர்ந்த கவிராசர் என்பவரால் ஆக்கப்பட்ட "கோணேஸ்வரர் கல்வெட்டு" என்னும் நூலையும், அகிலேச பிள்ளை அவர்களே வெளியிட்டு வைத்துள்ளார்!.

சைவ மதத்தை வளர்க்கும் பொருட்டு இவர் கந்தசாமி கலிவெண்பா, விசுவநாதர் விருத்தம், திருக்கோண மலை சிவகாமியம்மன் விருத்தம், வெருங்கல் சித்திர வேலாயுத சுவாமி விருத்தம், விசாலட்சுயம்மை பெருங்கழி நெடில் விருத்தம், திருக்கோண நாயகர் பதிகம், சிவகாமியம்மன் ஊஞ்சல், சித்தி விநாயகர் ஊஞ்சல், பத்திரகாளி ஊஞ்சல், இப்படியாக இன்னும் பல நூல் அகிலேச பிள்ளை அவர்களால் ஆக்கப்பட்ட நூல்களாகும்.

இவரால் ஆக்கப்பட்ட இன்னொமொரு பிரபந்தம், "நெறிஞ்சறி மாலை"யாகும். இந்த நூலின் விசேஷம் என்னவென்றால்? தம்மைத் தாமே திருத்துவது போலக்கூறி, உலகத்தவர்களின் நெஞ்சங்களைத் திருத்தி, சைவ நெறிக்கு ஆற்றுப்படுத்தும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலை அகிலேசபிள்ளை அவர்களின் மூத்த மகனான இராசக்கோன் என்பவரால், பருத்தித்துறை கலாநிதி அச்சகத்தில், 1913ம் ஆண்டில் பதிப்பித்து, வெளியிட்டிருந்தார்.

திருக்கோணமலையின் வரலாற்றுச் சிறப்பினையும், அதன் சமப் பாரம்பரியத்தையும் அறிந்திடச் செய்த அகிலேச பிள்ளை அவர்கள் தமது 57ம் வயதான 1910ம் ஆண்டு, ஜனவரி மாதம் இறைவனடி சேர்ந்தார்.

அகிலேச பிள்ளை அவர்களின் புதல்வர்களான திரு. இராசக்கோன், திரு. அளகைக்கோன் ஆகிய இருவரும் தந்தையாரின் படைப்புகளைப் பேணிக் காப்பதிலும், அவற்றைப் பதிப்பித்து, வெளியிடுவதிலும் கவனம் செலுத்தி, தந்தையாரின் தமிழ்த் தொண்டினை நாடறிய வைப்பதில் பெரும் பங்காற்றியிருந்தார்கள்.


MEERHAA AYURVEDA

GESUNDHEITS PRAXIS

Panchakarama Treatment Ayurvedic Beauty SPA

DR. SASHIMEERA SIVARASALINGAM

Tel. 076 426 34 44

INDIAN AYURVEDA THERAPIE



உங்கள் உடலில் ஏற்படும் வலிகள், நோக்கள் என்பவற்றிலிருந்து விடுதலை அடைந்து மகிழ்ச்சியான வாழ்வை வாழ்வதற்கு எம்மை நாடுங்கள்

- Kopfschmerzen (Migrane)
- Depressionen
- Muskelverhärtungen
- Arthrose
- Allergie
- Diabetes
- Bluthochdruck
- Schlafstörungen
- Mudigkeit

கவலை வேண்டாம் உங்கள் மருத்துவக் காப்புறுதி ஊடாக கட்டணம் செலுத்தலாம்



meena_1882@hotmail.com www.meerhaaayurvrda.ch

KRANKENKASSE ANERKANNT

முறைப்படி ஆயுர்வேத சிகிச்சை படித்தவர்களால்தான் வைத்தியம் பார்க்கப்படுகிறது.

Kanzleistrasse 115, 8004 Zurich. Natel : 076 426 34 44


ESTD 1992
Gopara Gnanam
மங்கையர் மனங் கவரும்
இந்த வருடத்திற்கான
புத்தம் புதிய ஆடைகள்
தமிழ்ப் புத்தாண்டை
முன்னிட்டு மாபெரும்
அதிரடி தள்ளுபடி
விற்பனை
மலிவு விற்பனை
Rheinische str.81,
44137 Dortmund / D
Tel. : 0231 5450 028,
Mob. : 0171 330 65 42,
0176 246 54 009
Wedding Sarees
DISCOUNT!!

பூமிபுத்திரன்

# யுத்தத்தின் முதல் பலி உண்மை



இந்திய உபகண்டம் தற்போதும் கொதி நிலையிலேயே இருந்து கொண்டிருக்கின்றது. இந்தக் கொதிநிலை கிட்டிய எதிர்காலத்தில் தணியக் கூடிய சாத்தியங்கள் எதுவும் தென்படுவதாக இல்லை. சிலவேளைகளில், இந்தக் கட்டுரையை நீங்கள் வாசிக்கும் வேளையில், பெப்ரவரி 26இல் நடைபெற்ற மோதல்களை விடவும் பாரிய மோதல்கள் வெடித்திருக்கக் கூடும். 1999 மே முதல் யூலை மாதம்வரை இடம்பெற்ற கார்கில் மோதல்கள் போன்ற பாணியில் யுத்தம் ஒன்று நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஏனெனில், மோதலில் சம்பந்தப்பட்டுள்ள இந்திய மற்றும் பாகிஸ்தானிய நாடுகளின் தலைவர்களுக்கு இத்தகைய மோதல் அவசியமாக உள்ளது.

நரேந்திர மோடியைப் பொறுத்தவரை, ஏப்ரல் - மே மாதங்களில் எதிர்பார்க்கப்படும் பொதுத் தேர்தலில் தனது வெற்றியை உறுதிப்படுத்த, சரிந்து கிடக்கும் தனது செல்வாக்கை உயர்த்திக் கொள்ள, அப்பாவி இந்து வாக்காளரிடையே தேசிய உணர்வை ஊட்ட அவருக்கு இந்த யுத்தம் தேவைப்படுகிறது.

மறுபுறம், இம்ரான்கானைப் பொறுத்தவரை, அவருக்கும் யுத்தம் அவசியமாகின்றது. மக்கள் மத்தியில் தனது செல்வாக்கை உயர்த்திக் கொள்ள, அப்பாவி மக்களிடையே தேசிய உணர்வை ஊட்ட, அனைத்துக்கும் மேலாக பொருளாதாரச் வீழ்ச்சியால் துவண்டு போயுள்ள நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் நோக்குடன் உலக வங்கியிடம் எதிர்பார்த்திருக்கும் கடனைப் பெற்றுக் கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய சிக்கன நடவடிக்கைகள் பற்றி மக்கள் கேள்வி எழுப்பாமல் இருப்பதற்காக எனப் பல்வேறு காரணங்களுக்காக இம்ரான் கானும் யுத்தத்தை விரும்புகிறார்.

இந்தியாவில் கடந்தமுறை நடைபெற்ற பொதுத் தேர்தலின் போது 'மோடி அலை' பிரமாதமாக வீசியது. 'பல்தேசியக் கம்பனிகளின் தலைமை அமைச்சர்' என வர்ணிக்கப்படும் நரேந்திர மோடியை கார்ப்பரேட் உலகம் பகிரங்கமாகவே ஆதரித்தது. குஜாரத்தின் 'கோத்ரா தொடருந்து நிலைய எரிப்பு' என வர்ணிக்கப்படும் முஸ்லிம் மக்கள் படுகொலையின் நாயகனான மோடி மீது விதிக்கப்பட்டிருந்த பயணத் தடையை அமெரிக்கா நீக்கிக் கொண்டது மட்டுமல்லாது, இந்தியாவிற்கான அமெரிக்கத் தூதுவர் - தேர்தல் சமயத்தில் - மோடியைச் சந்தித்துத் தனது வாழ்த்தையும் தெரிவித்திருந்தார். ராஜதந்திர நடைமுறைகளுக்குப் புறம்பான இந்தச் சந்திப்பு பல்வேறு விமர்சனங்களுக்கு உட்பட்ட போதிலும், அமெரிக்காவின் உட்கிடக்கை என்னவென்பதைத் தெளிவாக உணர்த்தி இருந்தது.

ஆனால், இன்று நிலைமை தலைகீழாக மாறியிருக்கிறது. ரஸ்யாவிடம் இருந்து எஸ்-400 ரகவிமான எதிர்ப்புக் கட்டமைப்பைக் கொள்வனவு செய்ய மோடி அரசு முடிவு செய்த நிலையில் உருவான மோதல், ஈரானிடம் இருந்து கச்சாய் எண்ணெய் கொள்வனவு செய்வதற்கான எதிர்ப்பு என விரிவடைந்து, இந்தியாவிற்கான பொருளாதாரச் சலுகைகளை விலக்கிக் கொள்ளும் அளவிற்கு வலுத்து இருக்கிறது. இதனை வேறுவிதமாகப் புரிந்து கொள்வதானால், எத்தகைய எதிர்பார்ப்புடன் மோடி அவர்கள் பதவியில் அமர்த்தப் பட்டாரோ அந்த எதிர்பார்ப்புகள் நிறைவடைந்து விட்ட நிலையில், மோடி கைவிடப் படுகின்றார் எனலாம்.

இந்தியப் பொதுத் தேர்தல் அடுத்தடுத்த மாதங்களில் நடைபெறலாம் என எதிர்பார்க்கப்படும் நிலையில், வெளியான கருத்துக் கணிப்புகள், மோடி தலைமையிலான பாரதீய ஜனதாகட்சி 220 இடங்களில் மாத்திரமே வெற்றி பெறும் எனக் கூறின. ஆனால், பாகிஸ்தான் மீதான குண்டு வீச்சுக்களின் பின்னர் மேடியின் செல்வாக்கு உயர்ந்திருப்பதாகத் தெரிகின்றது. தற்போதைய நிலையில் 260 இடங்கள் வரை பா.ஜா.க. வெல்லும் எனக் கூறப்படுகின்றது.

'பொய்யிலே பிறந்து பொய்யிலே வளர்ந்த' பா.ஜா.க. இதனால் உற்சாகம் அடைந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. எனவே, மேலும் சாகச நடவடிக்கைகளில் இறங்கலாம் என அவதானிகள் தெரிவிக்கின்றனர். பா.ஜா.க.வை விடவும், இந்திய ஊடகங்கள் ஒரு சிலவற்றின் நிலைப்பாடு மிகவும் அபாயம் நிறைந்ததாக வெளிப்படுகின்றது. 'ஈரைப் பேனாக்கி, பேனைப் பெருமாளாக்கும்' வல்லமைமிக்க இத்தகைய ஊடகங்கள் தகவல்களை அளவுக்கு மீறி ஊதிப் பெருப்பித்து, 'தேச பக்தியை' தேச வெறியாக்கி விருந்து வைக்கின்றன. இத்தகைய ஊடகங்களின் விசத்தை விழுங்கும் 'தேசாபிமானிகள்' பாகிஸ்தானிடம் இருந்து இந்தியாவைக் காப்பதற்கு மோடியை விட்டால் வேறு


ஆசியா சமுத்திரம்
Asiatischer Supermarkt

R.RAGUNATHAN
Parkhofstrasse 101
41836 Hückelhoven
+ 49 24 33 / 44 69 007

T. ANBALAGAN
Sittardstrasse 21
41061 Mönchengladbach
+ 49 21 61 / 90 28 388

IBAN : DE55 3907 0024 0474 1153 00 BIC : DEUT DE DB 390



GENERALI

**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**


Monbijoustrasse 29, 3001 Bern
☎ 058 473 24 45   🖷 058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch


www.generali.ch

076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

### வருமானக்காப்புறுதி
**EINKOMMENS - VERSICHERUNGEN**

வேலை இழக்க நேரிட்டால்
உங்கள் 100% வருமானத்தையும்
பெற்றுக்கொள்ள இலகுவழி

### சேமிப்புக்காப்புறுதி
**SPARVERSICHERUNGEN**

சிறுவர்கள் முதல் பெரியர்கள்
வரை அனைவருக்குமானது

### ஆயுட்காப்புறுதி
**LEBENSVERSICHERUNGEN**

உங்கள் குடும்பத்தின்
எதிர்காலத்தை பாதுகாத்திட

### வாகனக்காப்புறுதி
**FAHRZEUGEVERSICHERUNGEN**

உங்கள் வாகனத்திற்கு
தேவையான
அனைத்து காப்புறுதிகளும்

### வீட்டுக்காப்புறுதி
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**

சொந்த, வாடகை வீடுகளிற்கு
அவசியமான காப்புறுதி

### சட்டக்காப்புறுதி
**RECHTSSCHUTZVERSICHERUNG**

ஒவ்வொரு சட்டம் சார்ந்த
தேவைகளிற்கும்
அவசியமானது

### மருத்துவக்காப்புறுதி
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**

அனைத்து விதமான
மருத்தவ சேவைகளிற்கும்
தேவையான சிறந்த காப்புறுதி

### வீட்டுக்கடன்
**HYPOTHEKEN**

உங்கள் சொந்த
வீட்டுக்கனவை
நனவாக்கிட சிறந்த சேவை



எம்முடன் தொடர்பு கொண்டு
தேவையான ஆலோசனைகளை
இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில்
அனைத்தின மக்களினதும்
நம்பிக்கைக்குரியதும் இலாபம்
தரவல்லதும் எமது நிறுவனம்

ஆளில்லை என்பதைப் போல சிலிர்த்து நிற்கின்றனர்.

இந்தியா கூறும் தீவிரவாதிகளின் முகாம் அழிக்கப்பட்டதான ‘செய்திக்கு’ ஆதாரம் எதுவும் இதுவரை காண்பிக்கப் படவில்லை. அல் ஜசீராதவிர்ந்த பன்னாட்டு ஊடகங்கள் எதுவும் இது தொடர்பில் செய்திகளை வெளியிடவும் இல்லை. ஆனாலும், இந்திய ஊடகங்கள் இதனை முழுவதுமாக ஏற்றுக் கொண்டு வெற்றிக் களிப்பில் மிதக்கின்றன. நவீன தொழில் நுட்பம் நிறைந்த உலகில் நாம் வாழ்ந்தாலும் கூட, ஒளிப்பட ஆதாரங்களையோ, செயற்கைக் கோள் மூலம் பெறப்படும் படங்களையோ சமர்ப்பிக்க முடியாமை தொடர்பில் இத்தகைய ஊடகங்கள் கேள்வி எழுப்பவில்லை. அத்தகைய கேள்விகளை எழுப்பும் எண்ணமும் அவற்றுக்கு இல்லை. உண்மைத் தன்மை தொடர்பில் கேள்வி எழுப்பவதில் அத்தகைய ஊடகங்கள் எப்போதுமே அக்கறை கொள்வதும் இல்லை. அதனை ஒரு அவமானமாகக் கூட அவை நினைப்பதும் இல்லை.

மறுபுறம், தமிழ்த் தேசியவாதிகள் இம்ரான் கானைப் புகழ்ந்து தள்ளுகிறார்கள். மோடி எதிர்ப்பு என்ற ஒற்றைக் காரணத்தோடு வார்த்தைப் போரில் ஈடுபடும் அவர்களுக்கு காஸ்மீர் மக்கள் மீது திடீர்க் காதல் பிறந்திருக்கின்றது. தமது முஸ்லிம் விரோதப் போக்குகளை மறைத்துக் கொண்டு காஸ்மீர் மக்களுக்காக முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். இதில், ஆகக் கூடிய வேடிக்கை என்னவென்றால், ‘இம்ரான் கான் தமிழன் என்பது எத்தனை பேருக்குத் தெரியும். இவரது அப்பாவின் பெயர் இரமருதன். பூர்விகம் திண்டுக்கல்லை அடுத்த இரும்புஞ்சி கானம்...’ எனத் தொடரும் ஒரு பதிவு சமூக ஊடகங்களில் பரப்பப் பட்டமை. கல்வெட்டுக்களில் பொறிக்கப்பட வேண்டிய இத்தகைய கண்டுபிடிப்புக்களை நம்பவும், பரப்பவும் எம் மத்தியிலும் ஆட்கள் இருக்கிறார்கள் என்பதை நினைக்கப் புல்லரிக்கிறது.



ஆதிக்க வெறியர்களின் தேர்தல் ஆசைகளுக்காகவும், ஊடகங்களின் தேவைகளுக்காகவும் இன்னும் எத்தனை காலம் உண்மை பலியிடப்படுமோ?




Swiss, Zürich மாநிலத்தில் புதியதோர் உதயம்

# வரசித்தி மஹால் மண்டபம்

சகலவிதமான மங்கள வைபவங்களை மகிழ்ச்சியாகவும், தரமாகவும், நேர்த்தியாகவும் உங்களின் விருப்பத்திற்கு ஏற்ற விதத்தில் அனைத்து சேவைகளும் ஒரே இடத்தில் மனம் கவர்ந்த ஒரே அழகிய மண்டபம்...


திருமண விழா, நீராட்டு விழா, பிறந்தநாள் விழா அனைத்து வைபவங்களுக்குமான சைவ, அசைவ உணவு வகைகளை அறுசுவையுடன் சுவிஸின் அனைத்து பாகங்களுக்கும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்



**800 இருக்கை வசதியும்**
**400 வாகன தரிப்பிடமும்**
**கொண்ட மண்டபம்**

**Hüttenwiesenstrasse 6, 8108 Dällikon, Zürich, Switzerland**

| K.KOWTHAMAN | S.MANIVANNAN | K. VIJAYASURESH |
|---|---|---|
| 079 317 82 36 | 079 128 55 61 | 079 275 68 62 |

web : www.varasithy-mahall.ch mail : vasasithymahall@hotmail.com

அன்புச் செல்வன்

# ஏன் வேண்டும் தனித் தமிழ் ஈழம்?

பாகம்.84

**ஈழத் தமிழ் இனத்தின் வரலாறு இலங்கையில் 45,000 வருடங்களுக்கு முன்னரே இருந்திருப்பதை மானுடவியல் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இதன் மூலம் குமரிக் கண்டமும் அங்கு தமிழ் மக்களும் தமிழ் மொழியும் தோன்றியதற்கான அறிவியல் ஆதாரங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இன்றைய மனித இனத்தின் ஆதி மனித இனத்தின் வரலாற்று ஆதாரங்களை இலங்கையின் மகியங்கனைக் காடுகளில் அவுஸ்திரேலியாவின் கிரிபித் (Grifith) பல்கலைக் கழக மற்றும் கொழும்பு பல்கலைக் கழக மாணவர்களும் இணைந்து நடத்திய ஆய்வில் கண்டு பிடித்த செய்திகள் வெளியாகி உள்ளன.**

பல்வேறு மனிதகுலப் பிரிவுகளை மாந்தரியல் ஆய்வாளர்கள் அறிஞர் சார்லஸ் டார்வினின் உயிர்களின் பரிணாம வளர்ச்சிக் கொள்கையை காலப் பகுப்பின் பிரகாரம் வகுத்து உள்ளார்கள். அவற்றில் இன்றைய மனிதராகிய எமது பிரிவு ஹோமோ சேப்பியன்கள் எனப் பெயரிட்டுள்ளனர்.

இந்த வகை மனித குலத்திற்கு முந்தைய வகுப்பினரை விட சிந்திக்கும் திறனும், போரிடும் தன்மையும் மிகுதியாக உள்ளதால் இதனோடு ஒத்த காலப் பகுதியில் வாழ்ந்த நியண்டர்தால் வகுப்பின் அழிவுக்கும் இந்த ஹோமோ சேப்பிய இனமே காரணம் எனவும் ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இப்பெயரின் அர்த்தம் “அறிவில் சிறந்த இனம்” என்பதாகும்.

இந்த வகை மனிதன் 45,000 ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்ததற்கான மனித எச்சங்களைக் கண்டறிந்துள்ளார்கள். இந்த வகை இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் இன்றைய மனித குலம். 45,000 வருடங்களுக்கு முன்னர் சிங்களவர் தமிழர், இந்து, முஸ்லிம், ஆரிய சிங்களம் என்ற



பாகுபாடுகள்; கிடையாது. எல்லோரும் ஹோமோ சேப்பியன்கள் என்ற பொது வகுப்பைச் சேர்ந்தவர்களே!.

ஆனால், இலங்கையில் அன்று வாழ்ந்த மனிதனின் வாரிசுகளே இன்றைய ஈழத் தமிழ் இனம் என்ற உண்மையை யாரும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. சிங்களமும், உலக வரலாற்று நிபுணர்களும் ஓரளவு உண்மையான வரலாற்றுப் பதிவான மகாவம்சம் கூட சிங்களத்தில் எழுதப் பட்டிருக்க வில்லை. ஏனென்றால் அக்காலத்தில் சிங்கள மொழியோ, சிங்கள இனமோ தோற்றம் பெற்றிருக்க வில்லை.

அது பாளி மொழியில் எழுதப்பட்டது. எழுதியவர்களும் வட இந்திய மன்னன் அசோகச் சக்கரவர்த்தியால் புத்த மதம் பரப்புவதற்கு அனுப்பப் பட்ட தேரவாத புத்த மதப் பிக்குகளே. அவர்களின் நோக்கமாக ஒரு புதிய இனத்தை உருவாக்கி, அவர்களை புத்த மதத்தை ஏற்க வைத்து, இந்தியாவில் அழிந்து கொண்டிருந்த தேரவாத புத்த சமயத்தை காப்பாற்றும் நோக்கமே!.

எனவே, இலங்கையின் வட பகுதிகளில் தேரா வாத பௌத்த மதத்தின் போட்டிப் பிரிவான மகாயான மதமும், தென் இந்திய தொடர்புகளைக் கொண்டிருந்த தமிழர்களும், தெலுங்கு தேரவாத பிக்குகளுக்கு எதிரிகளாக தென்பட்டதில் வியப்பே கிடையாது.

புத்த மதம் பரப்ப வந்த பிக்குகளோ தமிழே தெரியாத பாளி சமஸ்கிருதம் பிராகிருத மொழிகளை மட்டுமே அறிந்த தெலுங்கர்கள் என்பதால் தமிழர், தமிழ் மொழி, இந்து மதம் என்பன அவர்களால் எல்லா வழிகளிலும் எதிர்க்க வேண்டிய காரணிகளாக இருந்தன.





அக்காலத்தில் இலங்கை முழுவதிலும் ஒரே மக்களும், இந்து மதமும் மட்டுமே இருந்தனர் என்பதற்கு புத்த மத வழிபாட்டுத் தலங்கள் அனைத்திலும் சிவ மற்றும் விஸ்ணு வழிபாடுகளே இன்றும் ஆதிக்கம் செலுத்துவதைக் காணலாம். சிங்கள மொழி வடிவமைப்பிலும், சொல் வளத்திலும் தமிழ் மொழியின் செல்வாக்கைக் காண முடியும்.

ஆகவே தென்னிந்திய சேர, சோழ, பாண்டிய தமிழ் அரசர்களையும், அவர்களின் ஆட்சிகளையும், ஈழத் தமிழ் மக்களையும் பகைமை உணர்வோடு பதிவு செய்வதும், சிங்கள பவுத்த ஆட்சியாளர்களை ஆதரித்து, மக்கள் மனதில் பிரச்சாரம் செய்தும், இறுதியில் கண்டி இராச்சியத்தை தமிழ், தெலுங்கர்கள் வசம் வரச் செய்தும், புத்த சமய வெறி மூலம் இலங்கையில் தெலுங்கரின் பரம்பரையை ஆட்சி அதிகாரத்தில் இருத்த அவர்களால் எழுதப்பட்ட பல புனைகதைகள் அடங்கிய மகாவம்சமும் உதவின.

அத்துடன் கண்டி மல்வத்த மற்றும் களனி புத்த மத பீடங்களும் அவற்றை தெலுங்கரின் வசம் வரச் செய்ததன் மூலம் முழுச் சிங்கள இனத்தையும் தமது கட்டுப் பாட்டில் வைத்து மத, இன, மொழி வெறிகளை ஊட்டி தெலுங்கு இனப் பிக்குகளின் ஆதிக்கத்தை வலுப்படுத்த அவர்களால் முடிந்தது. அவர்களால் உருவாக்கப்பட்ட கண்டி மல்வத்த மற்றும் களனி எனப்படும் இருபுத்த மத பீடங்களும் தமிழ் இன அழிப்பை நடத்தி, இன்று முழு இலங்கையும் இந்தியாவின் ஆதிக்கத்திற்குள் கொண்டு வந்து விட்டதைக் காண்கிறோம்.

இலங்கையில் இந்த இருமத பீடங்களின் ஆசி இல்லாமல் எவரும் ஆட்சி அமைத்து விடமுடியாது என்பதற்கு, அவர்களின் கால்களில் விழாத அரசியல் தலைவர்களே இல்லை எனலாம். இது போன்ற நிலைமையே இந்திய மத்திய அரசுகளின் அதிகார மையத்துள் தமிழரின் பரம எதிரிகளாகச் செயற்படும் மலையாளிகளும், தெலுங்கரும் மேலாதிக்கம் செலுத்துவதைக் காணலாம்.

இந்தியாவில் தமிழரைத் தவிர மற்ற அனைவரும் ஆரிய இனத்தவரே என்றும், போர்க் காலத்தின் பொழுது காங்கிரஸ் அரசியல்வாதி சசி தரூர்

மூலம் இலங்கையின் இந்தியத் தூதுவராகச் செயற்பட்ட பிரசாத் காரிய வசம் கர்நாடக, கேரள, ஆந்திர மாநில அரசுகளை அணுகி சிங்களமும், வடஇந்தியர்களும் ஆரிய இனத்தவரே! அதனால் இலங்கையில் நடக்கும் போர் ஆரிய திராவிடப் போராகும். எனவே, சிங்களத்துக்கு போரில் வெற்றி பெற உதவ வேண்டும் எனக் கேட்டுக் கொண்ட சேதிகளும் வெளி வந்தன.

இந்திரா காந்தியின் கொலையின் பின்னர் ஆட்சிக்கு வந்த அவரது மகன் ராஜீவ் காந்தியால் கூட தமது தமிழ் செயல் அதிகாரிகள் இருவரை அடுத்தடுத்து விலக்கியதும், அவர்களைத் தொடர்ந்து ரொமேஸ் பண்டாரி வந்து ஈழத் தமிழ் மக்கள் மீதான கெடுபிடிகளை அதிகமாக்கி, பெரும் போருக்கே வழி செய்ததை மறந்து விட முடியாது.

மத்திய அரசுத் தலைமை எவரது கையில் இருந்தாலும், அதன்; கொள்கை வகுப்பு அதிகார மையம் தெலுங்கர்கள், மலையாளிகள் வசமே இருப்பதால் அவர்களிடம் காணப்படும் தமிழ் இனமக்கள் மீதான வெறுப்பும், விரோதமும் ஈழத் தமிழ் இன அழிப்பிலும், தமிழக தமிழர்களின் இன்றைய கையறு நிலையிலும் காண முடிகிறது. இனி நாம் இந்திய மத்திய அரசின் தமிழர் தொடர்பான கொள்கை மாற்றம் ஒன்றை எதிர்பார்ப்பது எவ்வகையிலும் சாத்தியம் அற்ற ஒன்றாகி விட்டது.

தமிழகத்தில் தமிழரின் சீமான் தலைமையிலான தமிழ்த் தேசிய அரசியல், மத்திய அரசின் கொள்கை வகுப்பில் மாற்றம் ஏற்படுத்தும் அளவுக்கு அங்குள்ள அரசியல் களம் எமக்கு அனுகூலமாக மாறும் என்பதும் பகற் கனவே.

எனவே, இந்தியா தொடர்பான எமது கருத்தியலை மீள் பார்வைக்கு உட்படுத்தி, எமது தமிழ் மக்கள் தேசிய அரசியலை பிராந்திய அரசுகளின் கைகளில் விடாமல், சர்வதேச அரசுகளின் ஆதரவுடன் சர்வதேச சட்ட விதிகளுக்கு உட்பட்ட, அரசியல் தீர்வை நோக்கிய வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

இந்த உண்மையைப் புரிந்து, எமது நாடு கடந்த தமிழீழ அரசு மற்றும் அரசியல் செயற்பாட்டாளர்களும் தமது செயற்பாடுகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என அகரம் கேட்டுக் கொள்கிறது.

**தேடல் தொடரும்...**



# குற்றமற்றவன் முதற் கல்லெறியக் கடவான்


சண் தவராஜா

தமிழன் என்றோர் இனமுண்டு. தனியே அதற்கோர் குணமுண்டு' எனப் பாடிய புலவர் தமிழ்ச் சமூகத்தின் நற்குணங்களைப் புகழ்ந்தே பாடினார். ஆனால், தமிழ்ச் சமூகத்தில் நற்குணங்கள் மட்டுமன்றி, துர்க் குணங்களும் ஏராளமாகவே உண்டு. அதிலொன்று 'புறம் பேசுதல்', 'போட்டுக் கொடுத்தல்', 'காட்டிக் கொடுத்தல்' என்பவை, இத்தகைய குணத்தின் நீட்சியே. ஈழத் தமிழ்ச் சமூகத்தில், ஒரு காலகட்டத்தில் 'மொட்டைக் கடதாசி', அல்லது 'மொட்டைப் பெட்டிசன்' என்பது மிகப் பிரபலம் பெற்றிருந்தது.

மறைமுகமாக மேற்கொள்ளப்பட்டு வந்த இத்தகைய செயற்பாடுகள் ஒரு காலத்தில் வெளிப்படையாகவே மேற் கொள்ளப்படும் செயற்பாடாக மாறியது மட்டுமன்றி, சில வேளைகளில் சமூக அக்கறையை வெளிப்படுத்தும் ஒரு விடயமாகவும் மாறி இருந்தது என்றாலும், தனி மனிதன் ஒருவன் மீதான வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ள இத்தகைய 'கோள் மூட்டுதல்' தவிர்க்க முடியாத ஒரு மார்க்கமாக விளங்குகிறது. சிறிய உண்மையோடு, பாரிய புனைவுகளை இணைத்து மேற்கொள்ளப் படும் இத்தகைய செயல்கள், தனியொரு மனிதனின் நற்பெயரில் சேறு பூசுவதாகவும், அவப்பெயரை உருவாக்குவதாகவும் அமைந்திருக்கிறது.

நாகரிக வளர்ச்சிக் காலகட்டத்தில் இத்தகைய செயற்பாடுகள், நாகரீக மாற்றங்களையும் தன்னோடு இணைத்துக் கொண்டு, புதிய வடிவங்களில் வெளிப்படுவதைக் காண முடிகின்றது. அண்மைக் கால சமூக ஊடகங்களின் வளர்ச்சி, சாமானிய மனிதனுக்கும் இலகுவாகக் கிட்டும் தொழில் நுட்பம் போன்றவை 'தனி மனிதன் மீதான சேறு பூசுதலை' வேறு கட்டங்களுக்கு நகர்த்திச் சென்றிருக்கின்றது என்றால் மிகையில்லை. முகநூல், வாட்ஸ் அப், ட்டுவிட்டர், யூ டியூப் என்பவை போன்ற சமூக ஊடகங்கள் சாமானிய மனிதர்களால் இலகுவில் கையாளக் கூடிய மார்க்கங்களாக மாறியதன் பிற்பாடு, தனி மனிதன் மீதான சேறு பூசுதல் தொழில் நுட்பத்துடன் கூடிய வேறு பரிமாணங்களை எட்டி நிற்கின்றது.

கடிதங்கள் மூலம் மேற்கொள்ளப் பட்டு வந்த இத்தகைய விடயங்கள் தற்போது உயர்தர தொழில் நுட்பத்துடன் கூடிய காணொளி வடிவங்களில் இணைய வெளியில் உலவ விடப் படுகின்றன. ஒரு சில நொடிப் பொழுதுகளில் உலகம் முழுவதும் இந்தத் தகவல் பரவி விடுகின்றது. இத்தகைய செயலைச் செய்தவர் விரும்பினாலும் கூட, தானே வெளியிட்ட



தகவலை நூறு சதவீதம் திரும்பப் பெற முடியாத அளவிற்கு இன்றைய தொழில் நுட்பம் வளர்ச்சி கண்டதாகவும் சிக்கலானதாகவும் இருக்கிறது.

எந்தவொரு புதிய கண்டுபிடிப்பும், பரீட்சார்த்த நிலையில் சாதக பாதகங்களைக் கொண்டதே. கண்டுபிடித்தவரின் நோக்கம் ஒன்றாக இருக்க, அதனைப் பயன்படுத்துவோரின் நோக்கங்கள் கண்டுபிடிப்பாளரின் நோக்கத்திற்கு எதிர்மறையானதாக அமைந்திருந்தமையை பல வேளைகளில் நாம் பார்த்திருக்கிறோம். தகவல் தொழில் நுட்பமும் அதற்கு விதிவிலக்கானது அல்ல.

அண்மைக் காலத்தில், தகவல் தொழில் நுட்ப சாதனங்களைத் துஸ்பிரயோகம் செய்வோரின் எண்ணிக்கை அன்றாடம் அதிகரித்துச் செல்வதை செய்திகள் ஊடாக நாம் அனைவரும் அறிந்தே இருக்கின்றோம். இருந்தாலும் அத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. இவற்றைத் தடுப்பதற்கான முயற்சிகள் பல மட்டங்களில் மேற்கொள்ளப் பட்டாலும், இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவோர் தமது தந்திரோபாயங்களை தொடர்ந்தும் மாற்றிக் கொண்டே வருகின்றனர்.

ஒரு மனிதன் மீது அவதூறுப் பிரசாரத்தை மேற்கொள்வதன் மூலம், சம்பந்தப்பட்டவரைப் பழி வாங்கிய திருப்தியைத் தவிர வேறு எதுவும் கிட்டப் போவது இல்லை. ஆனால், குறி வைக்கப்படும் நபருக்கு ஏற்படக் கூடிய அவமானம், மனஉளைச்சல் போன்றவை அவரின் உயிருக்கே உலையாக மாறக் கூடிய அபாயம் உள்ளமையை நினைத்துப் பார்க்க வேண்டும். ஒருசில வேளைகளில் அது குறித்து நிற்கும் நபரையும் தாண்டி, அவர் சார்ந்த ஒட்டுமொத்தக் குடும்பத்தையுமே பாதித்துவிடக் கூடிய அபாயமும் உள்ளது.

மன்னராட்சிக் காலத்திலே ‘அறம் பாடுதல்’ என்றொரு வழக்கம் இருந்திருக்கிறது. தனக்குப் பிடிக்காத மன்னனை பாடல் பாடியே புலவர்கள் மரணிக்கச் செய்வதாக அல்லது மன்னன் மரணத்தைத் தழுவும்




வரைக்கும் அவனைப் பற்றி இகழ்ந்து பாடுவதாக ஒரு மரபு இருந்தது. இது உண்மையாக இருந்து, புலவர்கள் அறம் பாடி இருந்தால் அதில் ஒரு நியாயம் இருந்திருக்கக் கூடும்.

ஆனால், இன்று சமூக ஊடகங்களில் ‘அறம் பாடப்’ புறப்பட்டுள்ளவர்களின் செயற்பாடுகளில் அறம் இருப்பதாகத் தெரியவில்லை. மாறாக வஞ்சகம், சூது, பொறாமை போன்றவையே உள்ளன. பழி தீர்த்துக் கொள்வதற்காக இட்டுக் கட்டிய கதைகளைக் கொண்ட புனைவுகளுடன் அவர்கள் சமூக ஊடகங்களையும், தொழில் நுட்பத்தையும் துணைக்கு வைத்துக் கொண்டு, தங்கள் முகங்களை மறைத்துக் கொண்டு இணையவெளியில் சேற்றை வாரி இறைக்கின்றனர். இத்தகைய பதிவுகளில் உள்ள உண்மைத் தன்மையை ஆராய முயலாத அல்லது ஆராய விரும்பாத பலரும் இவற்றை உண்மை என நம்பும் சமூகத்திலேயே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை வேதனையுடன் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும்.

இத்தகைய செயற்பாடுகளில் ஈடுபடுவோர் தங்களை நோக்கி என்றாவது தாம் எழுப்பும் அதே கேள்விகளை எழுப்பி இருப்பார்களா? அவ்வாறு தம்மைத் தாமே கேள்விக்கு உட்படுத்துவார்களாயின் மற்றவரை நோக்கிக் கேள்வி எழுப்பும் தகுதி தமக்கு இல்லை என்பதைப் புரிந்து கொள்வர்.

அதுமாத்திரமல்ல, இணைய வெளி என்பது அனைவருக்கும் பொதுவானது. தங்கள் அடையாளங்களை மறைத்துக் கொண்டு அவதூறுப் பிரசாரங்களை முன்னெடுப்போர் பற்றி வேறு யாராவது அவதூறுப் பிரசாரங்களையோ, அருவருக்கத்தக்க காணொளிகளையோ வெளியிட்டால் அவரின் நிலை என்னவாகும்?

‘நீ என்ன நினைக்கிறாயோ, அதுவாகவே ஆகிறாய்’ என்ற கூற்றில் உண்மை இருக்குமாயின் மற்றவர் மீது அபாண்டமாக குற்றஞ்சாட்டிச் சேறு பூசுபவர்கள் என்றோ ஒருநாள் அத்தகைய சேறு பூசலுக்கு ஆளாகுவர் என நம்பலாம்.





IMPOrtas
Cash & Carry
தாயக உணவு வகைகள் உட்பட அனைத்து உணவு
வகைகளையும் உயர் தரத்தில் மிக மலிவாகவும்
நீங்கள் நம்பிக்கையோடு நாட வேண்டிய ஒரே இடம்...
GRAND OPENING
பேர்ண் நகரில்
புதிய உதயம்
வாடிக்கையாளர்களின் ஏகோபித்த
வேண்டுகோளுக்கிணங்க 30 வருடங்களாக
தமிழர்களின் அபிமானம் வென்ற
“இம்போட்தாஸ்” நிறுவனம் பேர்ண் மாநகரில்
தனது கிளையை திறந்து வைக்கின்றது
Kranichweg 8, 3074
Muri Bei Bern
☎ 031 951 24 44
Subash
Rubicon
RENUTE
PG tips
PATAK'S
Niru
Nestlé
Maggi
Kings
Gits
ELAKKIA
TRS
Thai Pride
SURYAA
Baslerstrasse 102, 8048 Zürich - Switzerland
Tel : +41 43 343 03 55 Fax : +41 43 343 03 56
email : info@importas.ch Web : www.importas.ch

**வண்ணை தெய்வம்**



# சித்தி

**பாகம் -3**

## சென்ற மாத தொடர்ச்சி....

மல்லிகாவிற்கும் சட்டம் தெரியும். சித்தியார் நான் எழும்பமாட்டேன் என சட்டம் பேசினால் தங்களால் ஒண்டும் செய்ய முடியாதென்பது. இருந்தாலும் தான் தேடிப்போய் சொல்லவேண்டியிருந்த நிலையில், “போனா மயிர்! வந்தா மலை!” என்ற கதையாட்டம் இப்பொழுது சித்தியே தன்னை தேடி வந்தபடியால் வாய்த்தால் வாய்க்குது என எண்ணியபடி கொஞ்சம் வீராப்பாகவே பேசிப் பார்த்தாள்.

கற்பகம் அதற்கும் எதுவும் பேசவில்லை. பேசுகின்ற நிலையிலும் அவள் இல்லை. தன்மீதுள்ள கோபம் இன்னமும் தீரவில்லை என்பது மட்டும் புரிந்தது. அருகிலிருந்த மல்லிகாவின் மைத்துனி சாந்திக்கே அண்ணியார் அவரது சித்தியை அப்படி எடுத்தெறிந்து பேசியதும் கற்பகம் அழுவதும் மனதிற்கு வருத்தமாக இருந்தது. அதனால் ஒரு ஆறுதலுக்காகக் கேட்டாள். “உங்களை நான் ஒண்ணு கேட்கலாமா?”

“கேளம்மா” கற்பகம் கண்களைத் துடைத்துக் கொண்டே சாந்தியின் வாயைப் பார்த்தாள்.

“உங்க சித்திதான் உங்ளைப் பாக்கவேணும் எண்டு நினைக்கவே இல்லையே! நீங்க எதுக்கு தேடி வந்து அவமானப்படுகிறீங்க”. உள்ளே போன மல்லிகா கதவோரமாக நின்று சித்தியார் என்ன சொல்கின்றார் என்பதைக் கேட்பதற்காக காதைக் கூர்மையாக்கிக் கொண்டாள்.

கற்பகம் ஒரு வறட்டுச் சிரிப்பை உதிர்த்தபடி சொன்னாள் “எனக்குத் தெரியுதம்மா மல்லிகா என்மீதுள்ள வெறுப்பைத்தான் வார்த்தையிலை கொட்டுறா எண்டு! பத்து மாதம் சுமந்து பெத்த எத்தனையோ பிள்ளையள் தாய் தகப்பனை மதிக்காமல் வாக்குவாதப் படுகிறதையெல்லாம் பாத்திருக்கிறேன். நான் சித்திதானே! போகட்டும் விடம்மா. கொஞ்ச

நாளெண்டாலும் என்ரை மடியிலையிருந்து என்ரை கையாலை சோறு வாங்கித்திண்ட பாசம் உள்மனதிலை இல்லாமலா போகும்? நான் செத்தா எனக்காக இரண்டு சொட்டு கண்ணீர் விடமாட்டாளா?"

இதை உள்ளேயிருந்து கேட்டுக் கொண்டிருந்த மல்லிகாவிற்கு "தான் கடுமையாகப் பேசிவிட்டேனோ" என மனம் குறுகுறுத்தது. சாந்தி மீண்டும் கேட்டாள். "அவங்களை நீங்க சின்ன வயசிலை அடிப்பீங்களாம்! அது அவங்க மனசிலை ஆழமாப் பதிஞ்சிருக்கும் போலை!"

கற்பகம் பெருமூச்சு விட்டபடியே சொன்னாள் "அம்மா அடிச்சா அது அக்கறை! அதையே சித்தி செய்தால் அது கொடுமை! இதுதானே காலங்காலமா எல்லாச் சித்திமாரும் எடுக்கிற பேர்! நான் நல்லவள் எண்டு பேர் எடுக்கிறதுக்கா இதைச் சொல்லேல்லை. ஆனால் சித்திமார் எதைச் செய்தாலும் அது கொடுமையாத்தான் மற்றவர்களுக்குத் தெரியுது. அதை அவர் இருக்கிறகாலத்திலை பிள்ளையளுக்கு விளங்க வைச்சிருக்கலாம். விதி அதுக்கிடேலை அவரையும் கொண்டு போட்டுது. என்ரை விதி இப்பிடியாப் போச்சுது." கற்பகத்தின் பேச்சில் வெறுமை தெரிந்தது.

"மற்றது... அந்த இன்சூரன்ஸ்சாலை வந்த முழுப் பணத்தையும் எடுத்தது சரியா" சாந்தியை மேலும் அதைப்பற்றிப் பேச விடாமல் கற்பகமே பேச்சைத் தொடர்ந்தாள். மல்லிகா காதுகளை இன்னும் கூர்மையாக்கிக்கொண்டாள். இதற்கு சித்தி என்ன சொல்லிச் சமாளிக்கப்போகின்றாள் என்பதைக் கேட்பதற்காக.

"ஆமாம் அந்தப் பணத்தை நான் வாங்கினது உண்மைதான்! அந்த நேரத்திலை எனக்கிருந்த ஆதாரம் அது ஒன்றுதான். எப்ப அவர் சாவார் எனக் காத்துக்கொண்டு இருந்ததைப்போலை அவருடைய பிரேதம் படலையைத் தாண்டிய மறுவாரமே பிள்ளையளையும் கையிலை இருந்த கொஞ்ச இருப்புகளையும் எடுத்துக்கொண்டு பாட்டி பிள்ளையளையும் கூட்டிக்கொண்டு போயிட்டா! சம்பளத்துக்கு வந்து பிள்ளையளைப் பாக்கிற வாடகைத் தாயிலைகூட பிள்ளையளுக்கு கொஞ்சமெண்டாலும் பாசம் இருக்கும்!

ஆனால் என்னை மாதிரி வளர்புத் தாய்மாருக்கு இந்தப் பிள்ளையள் சித்தி எண்டு கூப்பிடுவதே எங்களைக் "கொடுமைக்காரி" எண்டு கூப்பிடுறது மாதிரித்தான்! அப்பிடி பாட்டி இந்தப் பிள்ளையளின்ரை மனதிலை பதிய




வைச்சிடா! எனக்கு இரண்டாம் இடம்கூட அந்த வீட்டிலை கிடைக்கேல்லை! ஏதோ எங்கடை வீட்டுக் கஸ்டத்தாலை இரண்டாந்தாரமா வாழ்க்கைப் பட்ட எனக்கு அந்த வாழ்க்கையும் நிலைக்கேல்லை! அவர் செத்ததுக்கப்புறம் எத்தினைநாள் நான் சாப்பிட எதுவுமில்லாமல் பட்டினியாக் கிடந்திருப்பன்.

என்னைச் சாப்பிட்டியா எண்டு கேக்க ஒரு ஆள் இல்லை! அந்த நேரத்திலைகூட வேலை செய்த இடத்தாலை குடுத்த முழுப் பணத்தையும் பாட்டியும், பிள்ளையளும் தான் எடுத்தினம்! நான் எத்தினைநாளத்தான் பட்டினியாயே கிடப்பது? அந்த நேரத்திலை வந்த இன்சூரன்ஸ் காசு எனக்குக் கடவுள்மாதிரி இருந்திது. அதுதான் நான்தான் வாரிசெண்டு வாதாடிக் காசை வாங்கினன். நான் வாழ்றதுக்கு எனக்கு வேறை என்ன ஆதாரம்? என்னைப் பொறுத்தவரையிலை அண்டைக்கு நான் செய்தது சரிதான்.

கற்பகம் கண்களைத் துடைத்துக் கொண்டாள். இதையெல்லாம் கேட்ட மல்லிகாவிற்கு மனதிற்குள் ஏதோ செய்வது போல் இருந்தது.

“இரண்டாம் தாரம் எண்டாலே எல்லா வீடுகளிலும் இரண்டாம் தரம் எண்டுதான் நினைக்கிறாங்க! அப்படியெண்டு தெரிஞ்சிருந்தும் எங்க குடும்ப வறுமை காரணமத்தான் நான் இந்த வாழ்க்கைக்கே வந்தேன்! வந்த இடத்திலை எவ்வளவுதான் உண்மையா வாழ்ந்தாலும் வீட்டிலை உள்ளவங்க எல்லோராலையும் அவமானப் படுத்தப்படுவதை கட்டின புருசன்கிட்டைகூட வாய்விட்டுச் சொல்ல முடிவதில்லை! அந்த வலியெல்லாம் சும்மா வெறும் வார்த்தைகளாலை சொல்லமுடியாதம்மா! சொன்னாலும் ஆருக்கும் புரியாதம்மா” அந்த விரக்தி கலந்த வார்த்தைகள்! அதிலிருந்த தவிப்பு! அவையெல்லாம் இப்பொழுது மல்லிகாவிற்குப் புரியத் தொடங்கியது!.

சின்ன வயதிலேயே “சித்தியென்றால் கொடுமைக்காரி” எண்டு பாட்டி தங்கள் மனதிற்குள் விதைத்த விஷம் தங்களுக்கு விபரம் தெரிந்த பின்னர்கூட தங்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லையே என மல்லிகாவின் மனம் குற்ற உணர்ச்சியால் விம்மி அழுதது.

தங்கள் தாய்மையை அடகுவைத்து ஒருவருக்கு இரண்டாம் வாழ்வை வாங்கி... வந்த இடத்தில் பிள்ளைகள் அம்மா என்று அழைக்கா விட்டாலும் பரவாயில்லை, சித்தியென்றாவது அழைக்காதா? என ஏங்கி. அந்த வாழ்க்கையிலும் தோற்றுப்போன இதுபோன்ற எத்தனையோ ஆயிரம் கற்பகங்கள் நம்மிடையே இன்னமும் இருக்கத்தான் செய்கின்றார்கள்.

உள்ளே போன மல்லிகா கண்களைத் துடைத்துவிட்டு மீண்டும் வெளியே வந்தாள். கற்பகமும் கண்களைத் துடைத்தபடி எழுந்து “மல்லிகா இப்ப வெளிக்கிட்டாத்தான் இருட்டுறதுக் கிடையிலை வீட்டுக்குப் போகலாம். அப்ப நானும் புறப்படுறன் மல்லிகா” என்றாள் கற்பகம்.

“அதென்னது வந்தவுடனேயே புறப்படுறீங்க? அதெல்லாம் வேண்டாம். நான் இங்கை இருக்கிறவரைக்கும் நீங்களும் என்னோடைதான் இருக்கிறீங்க. சரியா சித்தி” மல்லிகாவின் வாயிலிருந்து முதல்முறையாக வந்த “சித்தி” என்ற வார்த்தையால் கற்பகத்தை தாயாக்கியிருந்தாள் மல்லிகா!.

**முற்றும்...**




# AMMA's food

## Dortmund

அன்பான உபசரிப்போடும், ஆனந்தமாய் கொத்து ரொட்டி, இடியாப்பக் கொத்து,
புட்டுக் கொத்து, இட்லி, தோசை, மசாலா தோசை, பிரியாணி, பாலப்பம்
இன்னும் பல வகையான உணவுகளை உங்கள் விருப்பத்துக்கேற்றவாறு
உண்டு மகிழ்ந்திட என்னும் உங்கள் நினைவில் நிற்கும்







## அம்மா'ஸ் உணவகம்






**0049 1776 794 261**
**0049 231 00 898 691**

ktheepan@hotmail.de
www.ammas-food.de
AmmasFood

**Rheinische Str-80A, 44137 Dortmund, Germany**

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்




### மனவுறுதி

சாதாரண நாற்காலியிலிருந்து
சதி செய்து வீழ்த்தினார்களா ?
வீழும் இடத்தை
வெற்றிக்கு அறியணையாக்கு

### நட்பு

இராமாயணம் தொடங்கி,
இயேசு காவியம் வரை
ஏட்டிலிருப்பதை நம்புபவர்கள்
குமரிக்கண்டத்தைப் பொய்யென்கிறார்கள்

### வாழ்க்கை

யாரோ நடந்த பாதையில்
நீ நடப்பதல்ல உன் வாழ்க்கை,
நீ நடந்த பாதையில் பிறர் நம்பி வந்தால்
அதுவே உன் வாழ்க்கை

### இரகசியம்

எத்தனையோ இரகசியங்கள்
எவருக்கும் தெரியாதிருப்பதனால் தான்
இயற்கை இன்னமும்
உயிரோடிருக்கிறது.



### முயற்சி

நீ தோற்றுவிட்டாய் என
நித்தமும் எண்ணிக் கொண்டிருப்பதிலே
கரைந்து கொண்டிருக்கிறது
உன் எதிர்கால வெற்றி

"உளம் திறக்கும் உண்மைகள்...!" என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.

# அகர கவிக்களம்....




## அணு

அன்று சொன்னார் ஔவையார்
அணுவுக்குள் ஏழு கடலை புகுத்த
இன்றோ அந்த அணுவால்
அகிலத்தை அழிக்கிறார்
அதற்குள் தான் நாமும் அடக்கம்
அழிவும் எமக்கு எளிதில் நடக்கும்,
பார்க்கும் சக்தி எமக்கில்லை
பாழாய் போன அணுசக்தியை


**கெங்கா ஸ்டான்லி**

## உணவு!...

சந்தையில் நல்ல விலையான
மாமிசத்தை மனிதன் உண்கிறான்
மனிதனின் அழகான உடலை
மண்ணும் நெருப்பும் உண்கின்றன!...

## வேறுபாடு!...

ஏழையின் இதயத்துக்கும்
பணக்காரனின் இதயத்துக்கும்
வேறுபாடு காட்டவில்லை
இறைவனின் படைப்பில்!..




## உத்தமன்!...

மனைவியைத் தவிக்கவிட்டு
பிள்ளைகளை அலையவிட்டு
மாற்றாளோடு ஓடியவன்தான்
நன்றி இல்லாத உத்தமன்!...

## போராட்டம்!...

நினைவேந்தல் நிகழ்வுகள்
வருடா வருடம் வந்துபோகும்
அரசியல்காரர்களும் வந்துபோவர்
தாய்மாரோ இன்றும் போராட்டத்தில்!...

## விதி!...

சமையலும் சாப்பாடும்
பணிதலும் பணிவிடையும்
பெண்ணினத்திற்கு என்றும்
எழுதப்பட்ட விதிகளோ...?

## மறதி!...

பெரும் பணம் செலவில்
இறக்குமதிக் கலைஞர்கள்
முற்றத்து மல்லிகைகள்
நம்மவர்களை மறக்கின்றோம்!...

# என்ன கொடுமை சரவணா!...

கல்லெறி வேலுப்பிள்ளை



## வணக்கம் பாருங்கோ, எப்பிடி இருக்கிறியள்?

**வருடம் தொடங்கி மூன்றாம் மாசமும் வந்திட்டுது. குளிர் முடிஞ்சா கோடை, கோடை முடிஞ்சா குளிர் எண்டு தான் வாழ்க்கை ஓடுது பாருங்கோ. இதில இடைக்கிடை வந்து போற மகிழ்ச்சியான சம்பவங்களால தான் வாழ்க்கை பாரமாகத் தெரியுறேல்லை. ஆனால் அதுவே சோகமான சம்பவங்கள் எண்டால் அதுவே பிரச்சனையாக மாறீரும் கண்டியளோ. இது இரண்டும் தானே வாழ்க்கை எண்டு நீங்கள் முணுமுணுக்கிறது கேக்குது பாருங்கோ. ஆனாலும் அதை வாயால சொன்னாலும் மனதளவில ஏற்றுக்கொள்ள முடியாது தானே பாருங்கோ.**

விசயம் என்னெண்டா பாருங்கோ! நாங்கள் கொஞ்சம் கொஞ்சமா அழிஞ்சுகொண்டே போறம் எண்டுறது இப்பவெல்லாம் என்ர கண்ணுக்குத் தெளிவாத் தெரியுது பாருங்கோ. ஐயோ அதுக்காக நான் ஒண்டும் சாமியார் இல்லை கண்டியளோ. நான் சொல்லுறது தமிழர்கள் ஒட்டுமொத்தமா அழிஞ்சுகொண்டு போறம் எண்டுறதைத்தான் பாருங்கோ. ஏதோ எங்களுக்கும் ஒரு நாடு இருக்கு எண்டு முந்தியெல்லாம் பெருமையா வாழ்ந்தோம். இனி அந்தபெருமை எல்லாம் கொண்டாடமுடியாது பாருங்கோ. எங்களுக்கெண்டு போராட புலிகள் இருந்தவை, அவைக்குப் பிறகு இனி யாரும் இல்லை எண்டு ஏங்குறது ஒரு புறமிருக்க, எங்கட ஆட்களே எங்கடை சனத்தைக் கொல்லுறது கொஞ்சம் கொஞ்சமா நடக்குது பாருங்கோ.

ஊரில பாருங்கோ, அதுவும் குறிப்பா யாழ்ப்பாணத்தில பாருங்கோ இப்பவெல்லாம் மேலைத்தேய கலாசாரம் நல்லாக் காலூண்டீட்டுது கண்டியளோ. அங்கே போய் நாங்கள் இனி வாழுறதே கடினம் பாருங்கோ. அதிலும் குறிப்பாக உயிர்காக்கும் மருத்துவம் விலையேறி மலையேறீட்டுது பாருங்கோ. இப்ப யாழ்ப்பாண வைத்தியசாலை தான் மருத்துவ முகவர்கள் தங்கட அலுவலகங்களை அமைச்சிருக்கிற இடம் பாருங்கோ. அங்க நடக்கிற வெள்ளையான கொள்ளையளைத் தான் நான் இப்ப உங்களுக்குச் சொல்லப்போறன். ஒருவிதத்தில அதுக்கு எங்கட ஆட்களும் காரணம் பாருங்கோ.

என்னவெண்டால் பாருங்கோ! கிட்டடியில யாழ்ப்பாண வைத்தியசாலைக்கு ஒரு நோயாளியைக் கொண்டு போயிருக்கிறார்கள். இரண்டு பிள்ளைகளை உடைய நடுத்தர வயதுத்

தாய்தான் அந்த நோயாளி. அவாவுக்கு சாப்பிட முடியேல்லை. வயிறு வீங்கின மாதிரி ஏதோ உணர்வு. பரிசோதிச்சுப் பார்த்ததுல “கேணியா” நோய் எண்டு சொல்லியிருக்கினம். உடனடியாக சிகிச்சை செய்யவேணும் எண்டு வைத்தியர் சொல்லியிருக்கிறார். சரி ஏதோ நாளைக்கே செய்வார்கள் போல இருக்கெண்டு குடும்பத்தினர் நினைச்சுக்கொண்டு வீட்டை போட்டினம்.

மறுநாள் வந்து பார்த்தால் அங்க சிகிச்சைக்குரிய எந்தவிதமான ஆயத்தங்களும் செய்யப்படேல்லை பாருங்கோ. என்ன ஏதென்று விசாரிச்சால், அவவுக்கு முன்னமே இங்க பலர் அதே நோயோட காத்திருக்கினம் எண்டு பதில் வந்திருக்கு. அவையின்ர ஒழுங்கின்படி பார்த்தால் கிட்டடத்தட்ட ஒரு வாரம் ஆகும் போல இருக்கு. என்னடா இது கோதாரி, உடனடியா மருத்துவம் தேவையான ஆளுக்குச் மருத்துவம் செய்யுறதோ அல்லது உயிரே போனாலும் வரிசைக்கிரமமாத் தான் செய்யுறதோ எண்டு குடும்பத்தினர் குழம்பீட்டினம் கண்டியளோ.

அங்க வேலை செய்யுற மருத்துவிச்சிகள் எல்லாரும் ஏதோ விண்வெளியில இருந்து குதிச்ச ஆக்கள் மாதிரித்தானாம் எங்கட சனத்தோட கதைப்பினம். அவையின்ர வாய்க்குள்ளால பதில் கிடைக்கிறது மன்னாரில மழை பெய்யிறதுக்குச் சமம் எண்டா பாருங்கோவன். அவையிட்ட போய் இந்தக்குடும்பம் எப்ப எங்கட பிள்ளைக்கு மருத்துவம் செய்யப் போறீங்கள் எண்டு கேட்டிருக்கினம். அது தலைமை மருத்துவர் வந்தபிறகுதான் தெரியும் எண்டு அடிச்சமாதிரிச் சொல்லிச்சினமாம். அவர் எப்ப வருவார் எண்டு கேட்டால், அது அவருக்குத் தான் தெரியும் எண்ட கணக்கில அடுத்த பதில் வந்திச்சுதாம்.

ஒரு மாதிரி அவர் ஆடிப்பாடி பின்னேரம் மூண்டு மணிக்கு வந்தாராம். வந்து இந்தப் பிள்ளையைப் பார்த்திட்டு, கொஞ்ச நேரம் யோசிச்சிட்டு, இது கொஞ்சம் ஆபத்தான நிலைமை, உடனடியாக மருத்துவம் செய்யவேணும் எண்டு சொல்லி இருக்கிறார். அட ஏதோ கடவுள் மனித உருவத்தில வந்திருக்கு எண்டு இந்தக் குடும்பத்திற்கு பெரிய மகிழ்ச்சியாப் போட்டுது பாருங்கோ. யார் இவவின்ர கணவர் எண்டு கேட்டு கணவரைத் தனியாக் கூட்டிக்கொண்டு போய் கதைச்சிருக்கிறார் மருத்துவர். அவர் எதுக்கு ஆலவட்டம் தூக்கினவர் தெரியுமோ ? அவர் என்ன கணவரோட கதைச்சவர் எண்டுறதை பாருங்கோவன்.

என்னெண்டா பாருங்கோ உங்கட மனைவிக்கு வந்திருக்கிறது கொஞ்சம் கடுமையான கேணியா. இதுக்கு உடனடி மருத்துவம் செய்யவேணும். இல்லை எண்டால் உயிருக்கு ஆபத்து. இந்த வைத்தியசாலையில இதுக்கான வசதிகள் குறைவு. நீங்கள் இஞ்ச இருந்து துண்டை வெட்டிக்கொண்டு வெளியில நான் தாற முகவரிக்கு வாங்கோ. அங்க வந்தியள் எண்டால் ஒரு ஐஞ்சு இலட்சத்தோட உடனடியா முடிக்கலாம் எண்டு ஆள் துளாவியிருக்கு. அதைக்கேட்ட உடனே கணவருக்கு ஐஞ்சும் கேட்டு அறிவும் கெட்டுப் போச்சாம் பாருங்கோ. ஐயா நாங்கள் சாதாரண விவசாயக் குடும்பம். உடனடியா ஐஞ்சு இலட்சம் திரட்ட எங்களால முடியாது ஐயா. இஞ்ச வைச்சு உங்களால மருத்துவம் செய்ய இயலாதோ எண்டு கணவர் காலில விழுந்து கெஞ்சிக் கேட்டிருக்கிறார்.

ஆனால் நம்மட தலைமை மருத்துவர் மசியுறதா இல்லை. இதுக்கெல்லாம் மசிஞ்சால்



GGS
FOOD SERVICE
CONTACT
R.P. PARAMESH
02305 93 73 75
017 93 91 607


ImmoFinance
Suisse GmbH
Contact :
Selvaratnam Mathan
புதிய வீடுகள் கட்டுவதற்கான ஆலோசனைகளுடன் அனைத்து சேவைகள்
வீடுகளை வாங்கவும், விற்கவும் உதிவிகள், ஆலோசனைகள்
சுவிசின் அனைத்து முன்னணி காப்புறுதி நிறுவனங்களினூடாக காப்புறுதி
முன்னணி வங்கிகளினூடாக வீட்டுக்கடன்
076 303 22 16
mathan@gmx.ch

அவர் தொழில் செய்ய ஏலுமே ? நாடு முழுக்க தன்னுடைய வைத்திய சாலைகளைக் கட்டி, அவர் இலட்சாதிபதியாக ஆகவேண்டாமே..? உப்பிடியான சில்லறைத்தனமான எத்தினை கண்ணீரை அவர் பார்த்திருப்பார் சொல்லுங்கோ பாப்பம். அதால உடனடியா ஆள் எழும்பி நிண்டு விறைச்சுக் கொண்டு அறச்சீற்றம் காட்டியிருக்கிறார். “இஞ்ச பாருங்கோ, உங்கட நன்மைக்காகத்தான் நான் சொல்லுறன், பிறகு ஏதாவது நடந்தால் என்ர தலையில பழியைப் போடக்கூடாது பாருங்கோ” என்று சொல்லிப் போட்டு ஆள் அந்த இடத்தை விட்டு உடனடியா போட்டார் கண்டியளோ. பின்ன உவர் ஒருத்தரோட நிண்டு மல்லுக்கட்டிக் கொண்டு நிண்டால், இன்னும் பல நோயாளிகளோட கதைச்சு அவரின்ர வியாபாரத்தை விரிவுபடுத்த ஏலுமே..? சீ.. சேவையைச் செய்ய ஏலுமே..?


மருத்துவர் உப்பிடிச் சொல்லிப் போட்டுப் போறார், என்ன செய்யுறதெண்டு தெரியேல்லை எண்டு கணவருக்கு ஒரே கலக்கம். பிள்ளையளும் அம்மா அம்மா எண்டு அழத் தொடங்கீட்டுதுகளாம். சரியெண்டு மறுநாளும் வைத்தியசாலையில காவல் இருந்து இன்னொரு வைத்தியரைச் சந்திச்சுக் கதைச்சால், அவர் ஒரு கிழமை பொறுக்கச் சொல்லி இருக்கிறார். எட கொள்ளையில போவாரே, உங்கட ஒரு கிழமைக்கு நோய் பொறுக்குமோ தெரியாமல் கேக்குறன். சாப்பிடாமல் கிடக்கிற அந்தப் பிள்ளைக்கு உடனடிச் சிகிச்சை செய்யவேணும் எண்டுறது சாதாரண மனுசனுக்கும் தெரிஞ்ச விசயம் தானே.

உவங்கள் எல்லாரும் கூட்டுக் கொள்ளைக்காரர் பாருங்கோ. ஏனெண்டால் ஒரு கிழமை பொறுங்கோ எங்கள், பயத்தில நாங்கள் வெளியில கொண்டுபோய் வைத்தியம் பாக்கிறம் எண்டு அவையாவே வெளிக்கிடுவினம் எண்டது உவங்களின்ர திட்டம் பாருங்கோ. ஆனால் உண்மையிலே காசு இல்லாதவன் எப்பிடி வெளிக்கிடுவான் பாருங்கோ. அதுகளும் நடக்கிறதைக் காண்பம் எண்டு காவல் இருந்திருக்குதுகள்.

ஒரு மாதிரி இழுத்துப் பறிச்சு, ஒரு கிழமைக்கு பிறகு, இவர்கள் மசியமாட்டாங்கள் எண்டு தெரிஞ்ச பிறகு மருத்துவம் செய்திருக்கினம் எங்கட மருத்துவர்கள். மருத்துவம் செய்து முதல் நாள் அந்தப் பிள்ளை கொஞ்சம் சாப்பிட்டிருக்குது. சாப்பிடுற இடைவெளிக்குள்ள நாங்கள் ஒருக்கா நல்லூர் கோயிலுக்குப் போட்டு வாறம் எண்டு குடும்பத்தில உள்ளசிலர் வெளிக்கிட்ட, கணவரும் தானும் போய் ஒரு தேங்காய் உடைச்சுப் போட்டு வாறன் எண்டு வெளிக்கிட்டிருக்கிறார். சரி நீங்கள் போட்டு வாங்கோ, நான் பிள்ளையளோட கதைச்சுக் கொண்டு இருக்கிறன் எண்டு சொல்லி இருக்கிறா மனைவி. கணவர் கோயிலுக்குப் போய், கும்பிட்டுட்டு திருநீறு சந்தனம் எல்லாம் எடுத்துக்கொண்டு, மனைவிக்குப் பிடிச்ச சாப்பாடெண்டு தோசையும் கட்டிக்கொண்டு வைத்தியாசாலைக்கு வந்திருக்கிறார்.

வந்து பார்த்தால் அந்த இடத்தில மனைவி இல்லை. இவர் போய் கொஞ்ச நேரத்தில அவவுக்கு மூச்சுத்திணறல் வந்து உயிர் பிரிஞ்சிட்டுது பாருங்கோ. மூச்சுத்திணறல் நேரத்தில ஒரு திருட்டு வியாபார மருத்துவர்களும் பக்கத்தில இல்லையாம் பாருங்கோ. ஏனெண்டா பாருங்கோ, காலமையில வந்து, நோயாளிகளோட வெருட்டிப் பேரம் பேசி, பன்னிரண்டு மணி வரைக்கும் அங்கின நிண்டு உலாத்திப்போட்டு, இரண்டு மணிக்கு அவங்கள் தங்கட சொந்த வியாபார நிலையத்துக்குப் போயிருவாங்களாம். பொதுவைத்தியசாலையில கையெழுத்து வைக்குறதுக்கும் மட்டும் சம்பளம் வருகுது. பின்னேரம் சொந்த வைத்தியசாலையில போய் கல்லாகட்டுற வேலை பாக்குறது.

இதில கொடுமை என்னெண்டால், வெளில கொண்டுவாங்கோ காப்பாற்றலாம் எண்டு சொல்லிப்போட்டு, அங்க கொண்டு போய் இயலாத கட்டம் எண்டு வந்தால், திருப்பியும் அரசினர் வைத்தியசாலைக்குத் தான் கொண்டுபோவாங்களாம், அப்பிடி அங்க கொண்டுபோற நேரத்தில, நீங்கள் ஏன் வெளியில போனனீங்கள் எண்டு அவர்கள் திரும்பி உள்ளுக்க அனுமதியாங்களாம். என்ர சிவனே, எங்கட சனத்தை வைச்சு உவங்கள்



செய்யுற வியாபாரம் கொஞ்ச நஞ்சமில்லை பாருங்கோ.

அதைவிட கிட்டடியில அங்க நடந்த கூத்துத் தெரியுமே ? இரவு நேரத்தில அவசர சிகிச்சைப் பிரிவுக்கு ஒரு விபத்தில படுகாயமடைஞ்ச நோயாளியைக் கொண்டு வந்திருக்கிறாங்கள். வந்த வேகத்தில தேடினால் அவசர சிகிச்சைப் பிரிவில் நீண்ட ஆண் மற்றும் பெண் தாதிமார் இருவரையும் காணேல்லையாம். எங்கடா போட்டுதுகள் எண்டு தேடிக்கொண்டு போனால் இரண்டு பெரும் ஒரு அறைக்குள்ள காதலில ஈடுப்பட்டுக்கொண்டு இருந்திச்சினமாம். உடனடியா வைத்தியசாலைக்குப் பொறுப்பான அதிகாரியின்ர காதுக்கு உந்த விசயம் போட்டுது பாருங்கோ.

அவர் இரண்டு பேரிலையும் நடவடிக்கை எடுக்க முயற்சிக்க, அவருக்கு எதிரா ஒரு சில ஆண் மற்றும் பெண் தாதிமார் போர்க்கொடி தூக்கியிருக்கினம். என்னடா வேற ஆக்களில ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தால் ஏன் எல்லாரும் பொங்குகினம் எண்டு பார்த்தால், அவைக்குள்ளையும் உதே பிரச்சனை தான் பாருங்கோ. உவங்களுக்கெல்லாம் தனி அலுவலகம் போட்டு, கட்டிவைச்சு தோலை உரிக்க வேணும் பாருங்கோ. சாகக்கிடக்கிற நேரத்தில ஒருத்தன் வைத்தியசாலைக்கு வந்தான் எண்டால், உதுகள் அதை வியாபாரமாகவும், கேளிக்கை நிலையமாகவும் மாத்தப்பாக்குதுகள்.

எல்லாம் இருக்கவேண்டிவர்கள் இருந்திருந்தால் சரியா நடக்கும். தமிழன் செத்தா என்ன வாழ்ந்தா என்ன எண்டு சிங்களவன் நினைக்கிறதை விட, தமிழனே இப்ப அப்பிடித்தான் நினைக்கிறான் பாருங்கோ. எங்கட ஆட்களும் காசு இருக்கிற கொழுப்பில உடன தனியார் வைத்தியசாலைக்கு ஓடுறது. அவங்களும் இதே சாட்டை வைச்சு கறந்து போடுவாங்கள். ஆனால் ஏழைச் சனம் என்ன செய்யும் பாருங்கோ. எங்க கொண்டு போய் எல்லாத்தையும் சொல்லி முறையிடுற தெண்டு தெரியேல்லை பாருங்கோ.

”குட்டி ஆடு தப்பி வந்தா
குள்ளநரிக்குச் சொந்தம்
குள்ளநரி தப்பி வந்தா
குறவனுக்குச் சொந்தம்
தட்டுக்கெட்ட மனிதர் கண்ணில்
பட்டதெல்லாம் சொந்தம்
சட்டப்படி பார்க்கப்போனா
எட்டடிதான் சொந்தம்”

- அப்ப வரட்டே





சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவலரி சாம்ராஜ்யம்
NS Jewellery & Textiles
தாலி மற்றும்
பொன்னுருக்குதல்,
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்
ஒவ்வொரு வருடமும் தைமாதம்
எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100 CHF என 12
மாதம் 1200 CHF இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்யலாம்.
Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com
info@nsjewellery.com
Tel: 044 440 60 50
Fax: 044 440 60 52
GUARANTEE
BEST PRICE
GUARANTEE
உயர்தர
புடவைகள் மற்றும்
துணி வகைகள்
வாங்க
சிறந்த இடம்
Rani
palace
044 440 60 52
ranipalace60@gmail.com
Tel : 044 440 60 52
Neugasse 60, 8005 Zurich - Switzerland

தேவன்

# நான் தெள்ளியவோர் முடிச்சவிக்கி



**சென்ற மாத தொடர்ச்சி....**

பிரான்சில் கோர்ல் காப்சு என்ற யூதர் 1935 ஆம் ஆண்டில் ஹாப்ஸ் செய்திகள் என்ற பெயரில் ஒரு செய்தி நிறுவனத்தைத் தொடங்கினார். பின்னர் அச்செய்தி நிறுவனத்திலிருந்து 'பிரஞ்ச் பிரெசு' என்ற தினசரி வெளிவந்தது. இதுவும் இதுபோன்ற எண்ணற்ற பல ஊடகங்களும், செய்தி நிறுவனங்களும் யூதர்களுக்குச் சொந்தமாக இன்று பிரான்சில் உள்ளன.

உலகம் முழுவதும் பல்லாயிரக்கணக்கான மின்னணு ஊடகங்களிலும், ஆயிரக்கணக்கான அச்சு ஊடகங்களிலும், யூதர்கள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள் என்பதை முன் பக்கங்களில் இடம் பெற்றுள்ள தகவல்கள் மூலம் அறிந்திருப்பீர்கள். எனினும், அந்தப் பக்கங்களில் ஒரு சிலவற்றை மட்டுமே அடையாளம் காட்டியிருக்கிறோம். அதுவும் உலகளவில் மிகவும் பிரபலமடைந்த ஊடகங்களின் நிலையை மட்டுமே அடையாளம் காட்டி இருக்கிறோம் என்பதை வாசகர்கள் நினைவில் கொள்ள வேண்டும். சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு தங்களுக்கு ஒரு நாடு இல்லாமல் - போக்கிடமில்லாமல் நாடோடிகளாக யூதர்கள் திரிந்து கொண்டிருந்த நிலையில், தங்களுக்காக ஒரு நாடு, ஏராளமான சொத்துக்கள், ஊடகங்களில் ஊடுருவல், மேலாதிக்கம் என்று சிந்தித்துக் களமிறங்கியதில் "ஏதோ ஒரு வகையில்" நியாயமிருக்கலாம்.

ஆனால் இன்று யாருக்கோ சொந்தமான பாலஸ்தீன நிலப்பரப்பை அமெரிக்க, ஐரோப்பிய பேரரசுகளின் துணையுடன் சர்வாதிகாரமாக ஆக்கிரமித்துக் கொண்டு அதில் தங்களுக்கென ஒரு நாட்டையும் இராணுவத்தையும் உருவாக்கிக் கொண்டு பாலஸ்தீனர்களை ஒடுக்கிப் படுகொலை செய்து கொண்டிருக்கும் நிலையில், ஊடகங்களில் இந்தளவுக்கு வெறித்தனமான ஆக்கிரமிப்பைச் செலுத்திக் கொண்டிருப்பது ஏன்? இதுதான் மிகவும் முக்கியமாக புரிந்து கொள்ளப்பட வேண்டிய விசயம். அவர்கள் இன்றும் இந்த அளவுக்கு ஊடகங்களில் வெறித்தனமாக ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருப்பதற்கு முக்கியமான மூன்று நோக்கங்கள் இருக்கின்றன.

வர்த்தகச் சூதாட்டம்: அதாவது

இன்றைய உலகமயமாக்கல் சூழலில், உலக நாடுகளை நிதிச்சந்தைக் கட்டுப்படுத்தும் சூழலில், எந்த ஒரு நிறுவனமும் பங்குச் சந்தைக்குள் நுழைந்து கோடி கோடியாய்க் கொள்ளையடிக்கலாம் என்ற சூழலில், வளர்ந்த, தேசங்கடந்த ஊடகங்களின் மூலம் பங்குச் சந்தையில் கோடி கோடியாய் லாபமீட்டலாம் என்பதுடன் படிப்படியாக பங்குச் சந்தையையே கைப்பற்றி உலக நாடுகளை ஆட்டுவிக்கலாம். அத்துடன் பங்குகளை ஒரே நேரத்தில் உருவி பங்குச் சந்தையையும் அதைச்சார்ந்து நிற்கும் உங்கள் நாட்டின் பொருளாதாரத்தையும் ஆட்டங்காணச் செய்வோம் என்று மிரட்டி பல காரியங்களை பல நாடுகளின் அதிபர்கள் மூலமே சாதித்துக் கொள்ளலாம்.

மேலும் ஊடகங்கள் கைவசம் இருப்பதால் மந்த நிலையில் இருக்கும் பங்குச் சந்தையைக் கூட சுறுசுறுப்பாக இயங்குகிறது. ஏற்றம் காணுகிறது. கொள்ளை லாபம் கொட்டப் போகிறது என்று புளுகி, சாதாரண, நடுத்தர முதலீட்டாளர்களை முதலீடு செய்ய வைத்துக் கொள்ளையிடலாம். மொத்தத்தில் பலதேசங்களை மொட்டையடிக்கலாம். பல தேசங்களை மிரட்டலாம், ஆட்டுவிக்கலாம், காரியம் சாதிக்கலாம்.

அது மட்டுமல்லாமல் இன்று வளர்ந்த, முன்னணி அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களும் செய்தி நிறுவனங்களும் கொள்ளை லாபத்தில் தான் இயங்குகின்றன. விளம்பரம் மற்றும் அரசின் சலுகைகள் மூலம் கோடி கோடியாய் இலாப மீட்டுகின்றன. பெருந்தொழில் அதிபர்களின் தரகர்களாகச் செயல்பட்டு டாலர்களில் குளிக்கின்றன. மேலும் தங்களது உற்பத்திப் பொருட்களையும் பன்னாட்டு நிறுவனங்களின் பொருட்களையும் 'உன்னதமாகச்' சித்தரித்து மக்கள் மூளையில் திணித்து அதன் மூலமும் பில்லியன் கணக்கில் அறுவடை செய்கின்றன.

கருத்தியல் பயங்கரவாதம். உண்மைகளை மறைப்பது, திரிப்பது, அவதூறுகளையும் பீதியையும் பரப்புவது. அதாவது கடந்த கால உண்மைகளை மறைத்து, மேற்குலக அரசுகள் நிகழ்த்திய, நிகழ்த்தி வருகிற வன்முறைகளை மறைத்து,



அரசு வன்முறைகளுக்கெதிரான போராட்டங்களையும் உரிமைகளுக்கான போராட்டங்களையும் தீவிரவாதமாகச் சித்தரித்து உலகமக்கள் மூளையில் திணிப்பது, சுருங்கச் சொன்னால், அவர்கள் தீர்மானிக்கும் செய்திகளையே படிப்பதும், பேசுவதும், சிந்திப்பதுமாக உலக மக்கள் இருக்க வேண்டும் என்ற நிலையை உருவாக்குவது இவர்களே.

இதை எளிமையாகக் கூற வேண்டுமானால் இப்படிச் சொல்லலாம். அதாவது இன்று உலக அளவில் வளர்ந்த முன்னணி ஊடகங்கள் எவற்றைச் செய்திகளாக வெளியிடுகின்றனவோ, அவற்றைத்தான் நடுத்தர, சிற்றிதழ்களும் செய்திகளாக வெளியிடுகின்றன. அவற்றைத்தான் விவாதத்திற்கு உட்படுகின்றன.

இந்த வட்டத்திற்கு அப்பாற்பட்டு இவர்களால் எதுவுமே செய்து விட முடியாது. ஒருவேளை வேறு ஒரு வட்டத்தை உருவாக்க முயற்சித்தால் அது காற்றில் கரைந்த முயற்சியாகவே அமையும். அந்த அளவுக்கு யூதர்கள் ஊடகப் பலம் பெற்றுள்ளனர். சுருங்கச் சொன்னால் யூதர்கள் தீர்மானித்திருக்கும் வட்டத்திற்குள்ளேதான் உலக மக்களின் சிந்தனை, படிப்பு, முயற்சி எல்லாம் இருக்கும் நிலையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இதுதான் உலகளாவிய கருத்தியல் பயங்கரவாதம்.


யூதர்களே கடவுளால் தேர்வு செய்யப்பட்ட இனம். அவர்களே இவ்வுலகை மேலாதிக்கம் செய்ய உரிமையுள்ளவர்கள் என்கிற கருத்தாக்கத்தை ஊடகங்கள் மூலமாக கொஞ்சம் கொஞ்சமாகப் பரப்புவது. இதை மேற்குலகில் பல ஊடங்களின் மூலம் பகிரங்கமாகவே செய்து கொண்டுதான் இருக்கிறார்கள். மேற்படி கருத்தாக்கத்தை மையமாகக் கொண்டு ஒவ்வொரு ஆண்டும் மாநாடுகளை நடத்திக் கொண்டுதான் இருக்கிறார்கள். அதில் அமெரிக்கா, ஐரோப்பிய முன்னாள், இன்னாள் அதிபர்கள், செயலர்கள் என்று பலரும் கலந்து கொண்டுதான் இருக்கிறார்கள். மொத்தத்தில் தங்களது பாசிசக் கோட்பாட்டை தங்களின் செல்வாக்குமிகுந்த ஊடகங்களின் வழியாகப் பரப்பி வருகிறார்கள்.

இவை தவிர ***myspace - basynet - wikipedia - woopidoo*** முதலானவையும் யூதர்களுக்குச் சொந்தமே. உலகச் செய்தி நிறுவனங்களில் யூதர்களின் ஆதிக்கம். யூதர்களுக்குச் சொந்தமாக உலகெங்கும் பல செய்தி நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. அமெரிக்காவில் மட்டும் நூற்றுக்கும் மேற்பட்ட யூதச் செய்தி நிறுவனங்கள் உள்ளன. அவற்றில் ஐந்து முன்னணி நிறுவனங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கவை, அனைவரும் அறிந்து கொள்ள வேண்டிய நிறுவனங்களாகும். ஏனெனில் இந்நிறுவனங்கள் உலகெங்கும் பல கிளைகளை பல்வேறு பெயர்களைக் கொண்டு இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும் இந்நிறுவனங்களும் இவற்றின் பல்லாயிரக் கணக்கான கிளைகளும் ஏராளமான தலைப்புகளில் எண்ணற்ற நூல்கள், மாத, வார, நாளிதழ்கள் ஆகியவற்றை வெளியிடுகின்றன. மேலும் மின்னணு ஊடகங்களையும் நடத்தி வருகின்றன.

1. டைம் பாக்ஸ் இது வார்னர் பிரதர்ஸ் என்ற சினிமா நிறுவனத்தின் பெரும் பங்குகளை வைத்திருப்பதுடன் உலகின் மிகப் பெரும் செய்தி நிறுவனமாகத் திகழ்கிறது. இதன் தலைமைப் பீடத்தில் 'ஜெரால்டுலைபன்' என்ற யூதர் கோலோச்சுகிறார்.

2. ராண்டம் - செய்தி நிறுவனம்





SINCE 2003
S.K. Silks &
Gold Paradise
யாரும் கண்டிராத
மலிவு விலையில்
இந்த வருடத்தின் புத்தாடைகள்
வாங்கிட எம்மை நாடவும்...
மங்கையர் மனதை
கொள்ளைக் கொள்ளும்
பட்டுச் சேலைகள் யுற்ரொப்ஸ், சிமோக்,
லேஸ், நெற்ஸ், லேசர் ரிசு சேலைகள்,
அனார்கலி பட்டியாலா பஞ்சாபிகள்,
பாவாடைத் தாவணிகள்,
காகிறாச் சோலிகளுடன்
ஆடவர்கள், சிறுவர், சிறுமியர்களுக்கான
ரெடிமேட் ஆடைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்
மாபெரும்
ராஜ
முத்திரை
ADLER STR. 33, 44137 DORTMUND
Tel : 0231 9501647
Fax : 0231 9501648

3. ஷைமன் அண்ட் ஷோஸ்டர் - செய்தி நிறுவனம்

4. ரிச்சர்டு பர்ன்ஸ்டைன் என்ற யூதரின் தலைமையிலான வெஸ்டர்ன் நிறுவனம்.

5. ரூபர்ட்முர்டோக்கின் நியூஸ் கார்ப்பரேஷன் செய்தி நிறுவனம்.

உலகெங்கும் செல்வாக்குச் செலுத்தி வரும் 'ராய்ட்டர்ஸ்' செய்தி நிறுவனமும் யூதர்களால் உருவாக்கப்பட்டு யூதர்களால் நிறுவகிக்கப் படுபவையே. இதன் தலைமையகம் பிரிட்டனில் இருக்கிறது.

**சினிமாத்துறையில் யூதர்களின் ஆதிக்கம்**

1. ஹாலிவுட்டின் மிகப் பெரிய சினிமா நிறுவனங்களில் ஒன்றான "பாரமவுண்ட"; நிறுவனம் லூயிசு மேயர் என்ற யூதருக்குச் சொந்தம்.

2. மெட்ரோ கோல்டன் என்ற நிறுவனத்தின் மூன்றில் இரண்டு பங்குகள் இரண்டு யூதர்களுக்குச் சொந்தம்.

3. மிகப்பிரபலமான பாக்சு நிறுவனம் வில்லியம் பாக்சு என்ற யூதருக்குச் சொந்தம்.

4. வார்னர் பிரதர்சு நிறுவனம் 'வார்னர'; என்ற யூதரால் உருவாக்கப்பட்டு இன்று அவரது சகோதரிக்குச் சொந்தமாக இருக்கிறது.

5. யுனிவர்சல் என்ற நிறுவனம் கார்ல் லைமீ என்ற யூதருக்குச் சொந்தம்.

இதுபோலவே பிரிட்டனில் 280க்கும் மேற்பட்ட மிகப்பெரிய சினிமா நிறுவனங்களை யூதர்கள் சொந்தமாகக் கொண்டிருக்கின்றனர்.

யூதர்கள் உலகெங்கும் ஏராளமான தொலைத் தொடர்பு நிறுவனங்களைச் சொந்தமாக வைத்திருக்கின்றனர். தொலைத் தொடர்பு நிறுவனங்கள் என்றால் டெலிபோன், செல்போன் நிறுவனங்கள் என்று பலர் சுருக்கமாகப் புரிந்து கொள்கின்றனர். ஆனால் யூதர்கள் கைவசம் வைத்திருக்கும் தொலைத்தொடர்பு நிறுவனங்கள் என்பது டெலிபோன்,



செல்போன், இணையம், வானொலி, தொலைக்காட்சி என்று பல ஊடகங்களை அதுவும் ஆயிரக்கணக்கில் இயக்கும் வசதிகளை உள்ளடக்கியவை என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

அப்படிப்பட்ட தொலைத் தொடர்பு நிறுவனங்கள் பலவற்றை யூதர்கள் உலகெங்கும் சொந்தமாக வைத்திருக்கின்றனர். அமெரிக்காவில் மட்டும் முப்பெரும் தொலைத்தொடர்பு நிறுவனங்களை வைத்திருக்கின்றனர். இந்நிறுவனங்கள் ஒவ்வொன்றும் ஆயிரக்கணக்கான தொலைக்காட்சி அலைவரிசைகளை இயக்கிக் கொண்டிருக்கின்றன.

1. ஏபிசி மற்றும் என்பிசி குழுமம்
2. எம்ரிவி குழுமம்
3. பாக்சு குழுமம்

இவையல்லாமல், நியூ கவுசு நிறுவனம் மட்டும் 24 தொலைத்தொடர்பு நிறுவனங்களை வைத்திருக்கிறது. அந்நிறுவனத்தின் மூலம் அமெரிக்காவில் மட்டும் நூற்றுக்கணக்கான தொலைக்காட்சி அலைவரிசைகளையும், உலகெங்கும் ஆயிரக்கணக்கான தொலைக்காட்சி அலை வரிசைகளையும் நடத்திக் கொண்டிருக்கிறது.

பிரிட்டனில் *ATV* குழுமம் என்கிற யூத தொலைத்தொடர்பு நிறுவனம் ஏராளமான தொலைக்காட்சி அலைவரிசைகளை நடத்திக் கொண்டிருக்கிறது. அதேபோல இரசியாவில் கோசின்சுகி என்ற *NTV* குழுமம் என்ற பெயரில் பல தொலைக்காட்சிகளை நடத்தி வருகிறார். இதுபோலவே பிரேசில், உருகுவே, பிரான்சு, ஆஸ்த்திரேலியா, பொலிவியா, ஜெர்மனி, இத்தாலிய போன்ற தேசங்களில் யூதர்களே 90 விழுக்காடு, ஊடகங்களில் மேலாதிக்கம் செலுத்தி வருகிறார்கள்.

**சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்**

உலகில் என்ன நடக்கிறது என்பதைச் சொல்வதை விட, நாம் சொல்வதே நடக்கிறது என்பதை நடைமுறைப்படுத்துவதிலேயே யூதர்கள் எப்போதும் குறியாக இருக்கிறார்கள்.

● முற்றும்



அவனா..? இவன்..!

# தமிழ்த் தேசியம் தேவையும் தோற்றமும்

தமிழ் இனத்தின் இருப்புக்கு கட்டாய தேவையாக உள்ள தமிழ்த் தேசிய அரசியல் இன்று, பெரும் ஆபத்தில் சிக்கி விட்டதை அவன் உணரத் தொடங்கி விட்டான். 2009ல் தமிழீழ விடுதலைப் புலிகளின் அழிப்பும், தமிழ் இன அழிப்புப் போரும், தமிழரின் தேசிய உணர்வுகளை வேரோடும், வேரடி மண்ணோடும் அழிக்க, அந்நிய ஆதிக்க சக்திகள் ஒன்று சேர்ந்துப் போரிட்டன.

அவை தமது பிராந்திய மேலாதிக்க வெறிக்கு தமிழ்த் தேசிய அரசியல், தடையாக விளங்குவதை ஏற்க மறுத்தன. அதனால் நோர்வே அனுசரணையில் நடைபெற்ற அமைதிப் பேச்சுகளின் போது, கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டிருந்த போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, பாரபட்சம் இன்றி நடுநிலையோடு போர் நிறுத்த மீறல்களை கட்டுப்படுத்தத் தவறியது. சிங்கள அரசின் மீறல்களை கட்டுப்படுத்தாமல், பழிகளை ஒரு தலைப் பட்சமாக புலிகள் மீது சுமத்தி வந்தது.

உணவு விநியோகத்தில் அரசு நடத்திய கடுமையான கட்டுப் பாடுகளை, மருத்துவ சேவைகளை ஒரு போர் ஆயுதமாக அரசு எடுத்தாண்ட நடவடிக்கைகளை, உலகின் கவனத்துக்கு கொண்டு வராமல், போர்க் குற்ற விதிமீறல்களை ஊக்கு வித்தது. சிறுவர் படை விடையத்தில் புலிகள் சர்வதேச சட்ட விதிகளுக்கு ஏற்பச் செயற்பட்ட பொழுதிலும், சிறுவரைப் புலிகள் போரில் ஈடுபடுத்தினர் என உலக அளவில் பிரச்சாரம் செய்ய ஐ.நா. சிறுவர் உரிமைச்சபை உண்மையைப் பேசத் தவறியது.

2004 சுனாமியால் ஏற்பட்ட அழிவுகளைச் சீர்செய்ய உருவாகப்பட்ட அரசு, புலிகள் இணைந்து செயற்பட உருவாக்கப்பட்ட இடைக்கால சுனாமி நிவாரண அமைப்பை செயற்பட விடாமல் அரசு முறித்த போதிலும், சர்வதேச சமூகம் தலையிட மறுத்தது.

எந்த ஒரு அரசியல் தீர்வையும் அரசு தரப்பு முன்வைக்காத நிலையில், புலிகள் முன்வைத்த மாற்றுத் தீர்வையும் கவனத்தில் எடுக்க இலங்கை அரசுக்கு, சர்வதேச அரசுகள் அழுத்தம் கொடுக்க மறுத்ததால், அந்த ஆகக் குறைந்த தீர்வுத் திட்ட யோசனையும் கிடப்பில் போடப் பட்டது.

அமைதிப் பேச்சில் ஈடுபட்டிருந்த வேளையிலும், புலிகள் மீதான தடைகளைத் தளர்த்தாமல், அமெரிக்காவில் உதவிகள் வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் புலிகளை தடை செய்ததன் மூலம், அமெரிக்கா தனது புலிகளை அழிக்கும் செயற்பாடுகளில் தீவிரம் காட்டியது.





அரசியல் தீர்வுத் திட்ட யோசனைகளில் புலிகள் இறையாண்மை என்ற கதவு இடுக்கின் ஊடாக, நாட்டைப் பிளவு படுத்த அனுமதிக்க முடியாது என வெளிப்படையாகவே றொபட் ஓ பிளேக் பேசி வந்தார். இப்படிப் பேசவும், நடக்கவும் இடம் கொடுத்தது எமது அரசியல் பிரதிநிதிகள், அவர்களை உள்ளடக்கிய தமிழர் தேசியக்

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**







தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

**மண்மணம் மாறாத சுவைதரும்**
**தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்**

மொத்தமாகவும், சில்லறையாகவும்
**NSR** தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்




ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள், இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும் பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.com**



கூட்டமைப்பு. தமிழரின் தேசிய எழுச்சி உருவான கதையும், அதன் இன்றைய நிலையும் அவனை மேலும் சிந்திக்கத் தூண்டின.

1947 பொதுத் தேர்தலில் அகில இலங்கைத் தமிழ் காங்கிரசை உருவாக்கி, தமிழ்த் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பித் தழைத்து ஓங்க வைத்தவர் அமரர் திரு.ஜீ.ஜீ.பொன்னம்பலம் அவர்களே!. 50க்கு 50-து என்ற தத்துவத்தின் மூலம், சிங்கள இனத்தின் பெரும்பான்மையை, ஏனைய இனங்களின் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மூலம், ஒரு சம நிலையை ஏற்படுத்துவதன் மூலம், நீதியான நிலையான ஆட்சியை உருவாக்கி விடலாம் என அவர் கனவு கண்டார்.

ஆனால், தமிழ் தேசியம் என்பது 1850களிலேயே ஆறுமுக நாவலர், தமிழ் மக்களின் கட்டாயத் தேவை என உணர்ந்து, அதற்கான கோரிக்கை விதைகளை தூவத் தலைப்பட்டார். அதனை அன்று சைவ பக்தராகக் காட்சியளித்த சேர்.பொன்னம்பலம் இராமநாதன் மூலமாக, பெரும் விருட்சமாக்கி விடலாம் என நினைத்தார். ஆனால், திரு. பொன்னம்பலம் தமது ஆங்கில மோகத்தாலும், சிங்கள அரசியல் நண்பர்களின் நட்பாலும், நாவலர் கொண்டிருந்த எதிர்பார்ப்புகளுக்கு விரோதமாக நடந்து கொண்டார்.

ஆயினும், "யாழ் வாலிபர் சங்கம்" என்ற அமைப்பு மேற்கொண்ட தமிழ்த் தேசிய அரசியலை கொழும்புத் தமிழரும், பொன்னம்பலத்தின் உறவினருமான அருணாசலம் மகாதேவா 1922ல் கொழும்பு மைய அரசியலுக்கு மடை மாற்றினார். 1930ல் நடை பெற்ற தேர்தலை வட பகுதி மக்கள் புறக்கணித்ததால், பிரதமர் பதவி ஏற்ற டி.எஸ்.சேனாநாயக்க, தமிழர் யாரும் இல்லாத தனிச் சிங்கள அமைச்சர் அவை மூலம், கல்ஓயா பதவியா போன்ற தமிழரின் நிலங்களில் சிங்களக் காடையர்களை அரச செலவில் குடியமர்த்தி, தமிழ்த் தேசிய அழிப்பின் தொடக்கப் புள்ளியைப் போட்டார்.

அன்றுமுதல் ஆட்சியில் இருந்த அத்தனை சிங்களவர்களும், தமிழ் தேசிய அழிப்பில் யாரும் சளைத்தவர் அல்ல என்பதை 1960ல் ஸ்ரீமா, 1977ல் ஜே.ஆர், 1995ல் சந்திரிகா, 2000ல் ரணில் 2005ல் மகிந்த, 2015ல் மைத்திரி என அனைவரும் நிரூபித்து விட்டனர். 2008, 2009ல் மூக்கை செலுத்திய இந்தியா, தமிழத் தேசியத்தை மீண்டும் ஈழத்தில் தலைதூக்கி விடாமல் செய்வதில் உறுதியாக உள்ளது.

ஈழத் தமிழினம் இழந்து விட்ட அரசியல் உரிமைகளை மீட்க, அனைத்து அமைதி வழிப் போராட்டங்களும் பயனற்றுப் போய்விட்ட நிலையில், தனித் தமிழ் ஈழ அரசை நிறுவ, அனைத்து வழிகளிலும் போராடுவது என 1976ல் வட்டுக் கோட்டையில், அனைத்து தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களும் கலந்து எடுத்த முடிவுதான் "வட்டுக் கோட்டைப் பிரகடனம்".

அதன் அடிப்படையில் தமிழ்


AFRO, ASIA SPICES MARKT

Bushhausener Str 63, 46049 Oberhausen

உங்கள் இல்லத்தரசிக்கு அவசியமான மளிகை பொருட்களும், மரக்கறிகள் மற்றும் அனைத்து மீன் வகைகளும், இலங்கை இந்திய எல்லா வகையான உணவுப் பொருட்கள் மற்றும் பாகிஸ்தான், ஆபிரிக்கா, சீன உணவுப் பொருட்களும் எம்மிடம் தரமாகவும், நியாய விலையிலும் பெற்றுக் கொள்ளலாம்

தொலைபேசி : 0208 82889175,
015214642896, 017680663804



என்றும் தரம்
எப்போதும் நியாய மலிவான விலையில்......

வாடிக்கையாளர் அனைவருக்கும்
எங்கள் உள்ளம் கனிந்த
தைப் பொங்கல் நல்வாழ்த்துகள்

Money Transfer

Ria MONEY TRANSFER

ACE money transfer

Aftab Currency

தலைவர்களும், போராட்டக் குழுக்களும் இணைந்து பூட்டான் தலைநகர் திம்புவில், இந்திய அரசின் ஏற்பாட்டில் இடம் பெற்ற இலங்கை அரசுடனான அமைதிப் பேச்சில், தமிழர் தேசியமும், தமிழரின் இறையாண்மையும் அங்கீகரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

வரலாற்று ஆதாரங்களின் அடிப்படையில், ஈழத் தமிழினம் அத்தகைய கோரிக்கைக்கு எல்லாத் தகுதிகளையும் கொண்டிருந்த பொழுதிலும், உள்ளக சுயாட்சியுடன் கூடிய சமஸ்டி ஆட்சி, அரசியல் தீர்வைக் கூட ஏற்க முடியாத வெறித் தனத்தோடு, இந்திய - இலங்கை அரசுகள் நடந்து கொண்டன. இன மேலாதிக்க பிராந்திய வல்லாதிக்க வெறியோடு, இலங்கை இந்திய அரசுகள் நடந்து கொண்டன. அமைதிப் பேச்சில் கலந்து கொண்ட பிரதிநிதிகளை கைது செய்தும், நாடு கடத்தியும், தமது காட்டு மிராண்டித் தனத்தை வெளிப் படுத்தின.

தமிழகத்திலும் இன்று தமிழருக்கு கட்டாய தேவையாக மாறி விட்ட தமிழ்த் தேசிய எழுச்சியை அழிப்பதில், மோடி அரசு தீவிரம் காட்டி வருகிறது. அதை அழிப்பதில் தி.மு.க.வும், தெலுங்கரான வை.கோ., திருமுருகன் காந்தி போன்று போலித் தமிழ் ஈழ ஆதரவாளர்களும், மிகத் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர். ஈழத் தமிழ் இன அழிப்பில் இவர்களின் பங்களிப்பு எத்தகையது? என்பதைக் காலம் எமக்கு காட்டி விட்டது.

2009 ஈழத் தமிழ் இன அழிப்பால் விழித்துக் கொண்ட 'நாம் தமிழர்' கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர், செந்தமிழன் சீமானின் அயராத உழைப்பால் உருவாகி வரும் தமிழர் தேசிய எழுச்சி அரசியலை முறியடிப்பதில் தி.மு.க. ஆதரவுடன் இந்திய காங்கிரஸ் கட்சியும், அ.தி.மு.க. ஆதரவுடன் பாரதிய ஜனதாக் கட்சியும், ஆரிய இனவாத அரசியலை தமிழகத் தமிழர்கள் மீது திணிப்பது, தீவிரமடைந்து வருவதை அவன் காண்கிறான்.

இலங்கையின் இன்றைய தமிழரின் நிலவரம் பற்றிய அறிக்கையில், வடபகுதியில் 27 பேர்களுடன் நடத்திய ஆய்வின் முடிவுகள் பின்வரும் செய்திகளை வெளிபடுத்தி உள்ளன:-

மிரட்டல் அல்லது உடலியல் துன்புறுத்தல




;- 63.0 சதவீதம்.

விசாரணை அல்லது நேர்காணலுக்கு உள்ளானவர் - 96.0

கண்காணிக்கப்பட்ட நிகழ்வுகளில் பங்கேற்றமை - 63.0

தேவை இல்லாத தொலைபேசி அழைப்புகளை பெற்றவர் - 56.0

தகவல் கொடுப்போரால் கண்காணிப்புக்கு உள்ளானவர்- 78.0

இத்தகைய கெடு பிடிகளுக்கு மத்தியில், திரு.விக்கினேஸ்வரன் தலைமையில், ஈழத்தில் தமிழ் மக்கள் தேசிய எழுச்சி பலம் அடைவது என்பது, பகற்கனவாகவே அவனுக்குத் தெரிகிறது.

தமிழ் மக்களால் பொதுத் தேர்தல் மூலம் தெரிவான அரசியல் தலைவர்கள் கூட தமது இன மானத்தையும், மக்களுக்கான தார்மீகப் பொறுப்பையும் மறந்து, மக்களின் அரசியலையும், இலங்கை அரசுகளால் மக்கள்



படும் அவதிகளையும் மறந்து, நடைப் பிணங்களாக, முதுகெலும்பு இல்லாத புழுக்களாக மௌனித்து, மக்கள் முன் மகான்களாக நடந்து கொள்வதே தமது தமிழ்த் தேசிய அரசியலாக முன்னெடுத்து வருகின்றனர்.

ஈழத் தமிழினம் இன அழிப்பில் இருந்து மீட்டு, அவர்களுக்கான தாயக தேசம், தன்னாட்சி அதிகாரம் பெற்ற தனித் தமிழ் நாடாக, உலக நாடுகளால் அங்கீகரிக்கப் பட்டால் மட்டுமே உலகில் தமிழ் இனத்தின் பாதுகாப்பும், அடையாளங்களும் உலகில் நிலைத்து நீடிக்கும் வாய்ப்பு ஏற்படும்.

தமிழீழ மீட்டை, ஈழ மண்ணில் போராடிப் பெறும் வசதிகளும், வாய்ப்புகளும் அறவே அழிக்கப்பட்டு விட்ட நிலையே தற்போது உள்ளது. எனவே, புலம்பெயர் தமிழீழ மக்களால் மட்டுமே தமிழரின் தாயக மீட்டை, சர்வதேச சட்ட விதிகளின் துணை கொண்டு, செய்து முடிக்க முடியும்.

அத்தகைய பணியை, நாடு கடந்த தமிழீழ அரசு மட்டுமே செய்து முடிக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பை கொண்டுள்ளது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர் அமைப்பாகத் தன்னைக் கூறிக் கொள்ளும் நாடு கடந்த தமிழீழ அரசு, புலிகள் மீதான தடைகளை அகற்றவோ அல்லது அதற்கு எதிராக இந்திய அரசு ராஜீவ் கொலையில் திட்டமிட்டுத் தொடர்புபடுத்தி, செய்து வரும் பிரச்சாரங்களை முறியடிக்கும் எந்தவித செயற்பாட்டையும் செய்யத் தவறி வருவது, புலிகளின் முதுகில் குத்துவதைப் போன்றே பார்க்கப்பட வேண்டி உள்ளது.


இந்த நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழீழ மக்களும் இரத்தமும், வியர்வையும், சொத்துச் சுகங்களையும், சொல்ல முடியாத அளவு துயரங்களையும், உயிர்ப் பலிகளையும் கொடுத்துப் போராடிய, தனித் தமிழ் ஈழக் கனவை நாடு கடந்த அரசு, தீவிரமாகப் போராடிப் பெறத் தவறினால் வேறு யார் வருவார்கள்?

இந்தக் கேள்விக்கான பதிலை திரு. விசுவநாதன் உருத்திரகுமார் தமிழ் மக்களுக்கு தரவேண்டும் என, அகரம் வாயிலாக அவன் கேட்கிறான்.

[அவன் வருவான்]


## Dortmund மாநகரில்....

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33**
**0231 950 979 00**

# PALAZIO
EVENTS









உங்கள் இல்லத்தின்
சகல விதமான மங்கல வைபவங்களை
உங்கள் விருப்பத்திற்கேற்ப அனைத்து சேவைகளுடனும்
ஒரே இடத்தில் கொண்ட ஓர் அழகிய மண்டபம்.

**0-100 மற்றும் 0-700 விருந்தினர்கள் வரை அமரக்கூடிய வாகனத் தரிப்பிட வசதிகளுடனும் கூடியது.**

## மேலும் எம்மிடம்....

மாலைகள், ஐயர், தவில் – நாதஸ்வரக் கச்சேரி, போட்டோ – வீடியோ,
பாட்டுக் கச்சேரி, நடனம், தங்கு விடுதி,
மணமகள் அலங்காரம், மேடை அலங்காரம், சொகுசு வாகன வசதி,
Limousine Car மற்றும்
பல தேவைகளும் ஒழுங்கு செய்து தரப்படும்.

+ (49) 1525 3961138 Kasinostr. 25 |42103 Wuppertal





பாகம் –2

ஆய்வாளர் சேது, அமெரிக்கா

# தமிழீழ விடுதலைப்போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

மனித சமூகமும் ஓர் உயிர் போன்றதுதான், அதிலும் இதுபோன்ற வலுகூட்டல் நிகழ்வுகள் ஒரு அழிவிற்குப்பின் இடருக்குப்பின் ஏற்படுகின்றன. சமூகங்கள் மாறிய சூழலுக்கேற்ப தங்களை மறுசீரமைத்து அதிக பலம் வாய்ந்ததாக மாறுகின்றன. இந்த வலுகூட்டல் எவ்வாறு மனித சமூகங்களில் நடைபெறுகிறது என்று தெரிந்தால், அதை நாம் வலிந்து பல முயற்சிகள் மேற்கொண்டு முன்பைவிட ஒரு வலுவான தமிழ்த் தேசியத்தை உருவாக்கலாம். முதலில் வரலாற்றிலிருந்து சில உதாரணங்களைப் பார்ப்போம். பின்பு ஈழப்போர் எவ்வாறு அவ்வாறான வலுகூட்டலுக்கு வாய்ப்பளித்திருக்கிறது என்று பார்ப்போம்.

### சப்பானியர்கள்

இருநூறு வருடங்களாக வெளி உலகுக்குக் கதவை தாளிட்டிருந்த சப்பானை, **1853-**இல் அமெரிக்கக் கடற்படைத் தளபதி பெரி ***(Matthew Perry)*** அவர்கள் பீரங்கிகளைப் பொருத்திய கப்பல்களுடன் முற்றுகையிட்டார். வணிகத்திற்கு சப்பான் கதவைத் திறக்கவேண்டும், இல்லையென்றால் போர் என்று மிரட்டினார். அப்பொழுது சப்பானிய வீரர்கள் வில்லும் வாளும் கொண்டிருந்தனர். தங்களது இயலாமையையும் பின்னடைவையும் உணர்ந்த அவர்கள் ஒரு நவீன சப்பானை உருவாக்க முடிவெடுத்தார்கள். அன்றைய சப்பான் பல வர்க்க வேறுபாடுகளுடன் ஒருவித சாதிக் கட்டமைப்புடன் இருந்தது. அரசர் என்பவர் பெயரளவில்தான், அனைத்து அதிகாரமும் சோகன் என்ற படைத்தளபதியிடமே இருந்தன. படை வீரர்களான சாமுராய்கள் சமூகத்தில் உயர்நிலையில் இருந்தனர். இது நவீன சப்பானை உருவாக்க பெரிய தடங்கலாக இருந்தது.

இவ்வாறு இருந்த பல தடங்கல்களை நீக்கி, மக்களை ஒன்று திரட்ட ஒரு புதிய கற்பிதம் ***(narrative)*** தேவைப்பட்டது. அதற்கு அவர்கள் தங்களது பழைய வரலாற்று கற்பிதங்களிலிருந்து உருவாக்கியதுதான் கோக்குட்டாய் ***(Kokutai)*** கற்பிதம். இதன்படி அரசர் சூரியக்கடவுளின் புதல்வராகவும், சப்பான் என்பது அரசரை மையமாகக் கொண்ட ஒரு பெரிய குடும்பமாகப் பார்க்கப்பட்டது. இந்தக் கற்பிதத்தைக் கொண்டு சப்பானை நவீனமாக்கும் “மெய்சி மீட்பு” ***(Meiji Restoration)*** நடத்தப்பட்டது. கோக்குட்டாய் அவர்களது பழைய வரலாறு; அதனை அவர்கள் மீட்க

# DORTMUND மாநகரத்திலே
# தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும்
# உணவுப் பொருட்களை மொத்தமாக
# பெற்றுக் கொள்ள நாடுங்கள்

StaR-Impex




Rabeena
Aachi
BTM

பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

## Lebensmittel Grosshandel e.K.


Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net


TRS




MDH Laziza Cock Brand DAAWAT Elephant House Shan AKASH BASMATI Rubicon Tilda

Nestlé PG tips Niru AROY-D MTR AASHIRVAAD Pillsbury PATAK'S Laila


உங்கள் அனைத்து
வாகனத் தேவைகளுக்கான
ஒரே இடம்
044 803 47 47
078 300 90 90
Airport Transfer
VIP Service
Limousine
Reisebusse
Kleinbusse
Gruppen-Transfer
SWISS RENT A CAR
SRAC
Swiss Rent a Car GmbH
Schaffhauserstrasse 137
8302 Kloten
www.swissrentacar.ch
அனைத்து வாகனத் திருத்த
வேலைகளுக்குமான ஒரே இடம்
Reifenwechsel
Auto Diagnostik
Karosserie
Klimaservice
MFK Bereitstellung
Bremse und Stossstange
Autoradio Montage
Reinigung und Polieren
Sonstige Reparaturen
Ersatzwagen
KGS
Gaswerkstrasse 8, 8952 Schlieren
044 500 01 02

முனைவதால், இதை புரட்சி என்று பெயரிடமால் "மீட்பு" என்று பெயரிட்டனர். சாதி வர்க்க வேறுபாடுகளை ஒழித்து தங்களை மறுசீரமைப்பு செய்து நவீன சப்பானை உருவாக்கினார்கள். கடற்படைத் தளபதி பெரி வந்து நூறு ஆண்டுகளுக்குள் அதே அமெரிக்காவுடன் சரிசமமாக போர் புரியும் வல்லமையை இரண்டாம் உலகப்போரில் நிரூபித்தார்கள். மொத்தத்தில் கோக்குட்டாயை அடித்தளமாக வைத்தே நவீன சப்பான் கட்டி எழுப்பப்பட்டது.

## யூதர்கள்

மனித சமூகத்தில் இந்த வலுகூட்டலுக்கான சிறந்த உதாரணம் என்றால் யூதர்கள்தான். அவர்களை அழிக்க பாபிலோனியர்கள், ரோமர்கள், நாசிகள் என்று பலர் வரலாற்றில் தோன்றி இனவழிப்பு செய்துள்ளனர், ஆனால் நடந்தது என்னவோ யூதர்கள் இன்றும் இருக்கிறார்கள், இனவழிப்பு செய்தோர் இன்றில்லை. இதற்கு அடிப்படைக் காரணம் அவர்கள் இனவழிப்புகளில் இருந்து கற்று, தங்களை மறுசீரமைப்பு செய்துக் கொண்டதுதான்.

கி.மு 598-இல் அன்றைய இஸ்ரேல் நாட்டை பாபிலோனியர்கள் ஆக்கிரமித்து, அவர்களின் கோவிலை இடித்து, இனவழிப்புக்கு உள்ளாக்கி, யூதர்களை இசுரேலிலிருந்து நாடு கடத்தி பாபிலோனுக்குக் கொண்டு சென்றார்கள். அன்றைய யூதர்கள் தங்கள் அடையாளத்தை பாதுகாப்பதற்கு நாட்டையும், அரசரையும், கோவிலையும், பூசைகளையும் நம்பியே இருந்தனர். இவை அனைத்தையும் இழந்த நாடு கடத்தப்பட்ட யூதர்கள் எதிர்நோக்கிய முக்கிய சிக்கல் அடையாளத்தை எவ்வாறு காப்பது என்பதுதான். தங்கள் அடையாளத்தைக் காக்க தங்களது வரலாற்றை அடுத்த தலைமுறைக்கு கற்பிப்பதன் மூலமே சாத்தியம் என்றுணர்ந்து, பழைய நூல்களையும் கட்டுக்கதைகளையும் புனைந்து ஒரு நூலை உருவாக்கினர். அதுதான் இன்று நாம் காணும் பைபிளின் முதல் ஐந்து நூல்கள். அதுபோக, புதிய சடங்குகளை உருவாக்கி தங்களது தனித்துவத்தைக் காத்தனர். மொத்த பைபிளின் கதை என்பது இழந்த நாட்டை மீண்டும் பெறுவோம் என்ற கருத்தை மையமாக வைத்தே எழுதப்பட்டது. இவற்றைக்கொண்டு தங்களது வாழ்க்கை முறையை மறு சீரமைத்து தங்களை காத்துக்கொண்டனர். அதன் விளைவாக உருவானதுதான் யூதமதம்.

இன்று நாம் காணும் நவீன மதங்களின் ஆரம்பம். ஐம்பது வருடங்கள் கழித்து பாபிலோன், பெர்சியாவிடம் போரில் தோற்றபின், அவர்கள் "புதிய" யூதர்களாக நாடு திரும்பினர். சில நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ரோமர்கள் இஸ்ரேலைப் பிடித்து, இனவழிப்புக்கு உள்ளாக்கி, கோவிலை இரண்டாவது முறையாக கி.பி. 70-இல் உடைத்தார்கள். இம்முறையும் யூதர்கள் தங்களை மாறிய சூழலுக்கு ஏற்ப மாற்றிக்கொண்டார்கள். கோவில்களும் பூசைகளும் தங்களை காப்பாற்றாது, முறையான கற்றலின் மூலமே தங்களை காக்கமுடியும் என்று மறுசீரமைத்துக் கொண்டனர். உலகிலேயே அவர்கள்தான் 100% சதவிகித கல்வியறிவை 1000 வருடங்களுக்கு முன்பாகவே அடைந்தனர். நாடே இல்லாமல் 2000 வருடங்களாக வாழ்ந்தாலும், அவர்கள் கற்றல் மூலம் தங்கள் இன அடையாளத்தை இழக்காமல் பாதுகாத்தனர். கற்பிதங்கள் உணர்வுப் பூர்வமாக, அவர்களைப் பிணைத்து அவர்களை ஒற்றுமையுடன் வைத்திருந்தது.


THOOYA COMMUNICATION






Lyca TV BOX எம்மிடம் கிடைக்கும்

Rheinische Str 80
44137 Dortmund




பின்பு 19ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் யூத எதிர்ப்பு பரவியபோது, மீண்டும் கற்பிதங்களில் சீர்திருத்தம் கொண்டுவந்து, அவர்களின் நாட்டை மீட்டெடுக்க புதிய தலைமுறையை வளர்த்தெடுத்து வெற்றி கொண்டார்கள். நாசிகளின் இனவழிப்பு முடிவில் அவர்கள் பலம்பெறவே துணைபோனது.

### அரேபியர்கள்,மேற்குலகம்,பொதுவுடைமை

எந்த பெரிய பொருளாதாரமும் இல்லாத பாலைவனத்தில் பல சிறுசிறு குழுக்களாகச் சிதறி ஒருவருக்கொருவர் போரிட்டு சிதைந்து கொண்டிருந்தார்கள். ஒரு சமூகம் எவ்வளவு கீழே போகமுடியுமோ அவ்வளவு கீழே இருந்தார்கள். அப்பொழுது தான் இஸ்லாம் என்ற ஒரு புதிய கற்பிதம் தோன்றி அரேபிய சமூகத்தை மறுசீரமைத்து பொற்காலம் கண்டது. இப்பொழுதைய மேற்குலகம் அன்று இருண்ட காலத்தில் இருந்தது.

இதைப்போலவே 16 ஆம் நூற்றாண்டில் கத்தோலிக்க சபையில் நடந்த ஊழல்கள் ஐரோப்பாவில் வாழ்ந்த மக்களிடேயே கொதிப்பை ஏற்படுத்தியது. அதன் விளைவாக மார்ட்டின் லூதர் அவர்கள் கிருத்துவ கற்பிதத்தில் கொண்டுவந்த சீர்திருத்தம் *(Reformation)*, மேற்குலகை மறுசீரமைத்து இன்றைய நவீன உலகை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகித்தது. அதே வழியில், தொழிலாளர்கள் சிக்கலில் தவித்த உலகில்,"இதுவரை வாழ்ந்த மனித சமூகங்களின் வரலாறு என்பதே வர்க்கங்களுக்கு இடையேயான போர்தான்" என்று ஒரு புதிய கற்பிதத்தை உருவாக்கி மறுசீரமைப்பை முன்மொழிந்தார் மார்க்ஸ். அது உலகில் பல நாடுகளைக் கவிழ்த்தி புரட்சியை உருவாக்கியது. எந்த நாடுகளில் இக்கற்பிதம் அந்நாடுகளிலுள்ள கற்பிதங்களுடன் ஒத்துச் சென்றதோ, அங்கே மட்டுமே ஏற்றுக்கொள்ளப்பட்டது. கற்பிதங்கள் முரணாக இருந்தால் ஏற்றுக்கொள்ளப் படவில்லை. உதாரணமாக இஸ்லாமிய நாடுகளில் இக்கற்பிதம் ஏற்றுக்கொள்ளப் படவில்லை.

இதுவரை பார்த்த உதாரணங்களிலிருந்து எவ்வாறு சமூகம் இடர்களின் போது மறுசீரமைப்பு செய்து கொள்கிறது என்பது ஓரளவு புரிந்திருக்கும். இந்த முறையை கீழுள்ள படம் விளக்குகிறது. அடிப்படையில் அறிவுசீவிகள் மாற்றத்திற்கான தேவையின்படி புது கற்பிதங்களை உருவாக்குகிறார்கள், பழைய கற்பிதங்களை தூசுதட்டி பயன்படுத்துகிறார்கள், அல்லது கற்பிதங்களுக்கு புதிய பொருளைத் தருகிறார்கள். புதிய கற்பிதங்கள் மக்களிடம் பரப்;படுகின்றன. பின்பு கற்பிதங்களைக் கொண்டு கருத்துருவாக்கம் செய்து மக்களிடையே மறுசீரமைப்புக்கு ஆதரவு திரட்டுகிறார்கள். முடிவில் மறுசீரமைப்பைத் திட்டமிட்டு செய்து முடிக்கிறார்கள்.

### மறுசீரமைப்பு *(Reorganition)*

மேலுள்ள, உதாரணங்கள் பெரும்பாலும் கற்பனை அல்லது இறைக் கோட்பாட்டின் அடிப்படையில் அமைக்கப் பட்டது. ஆனால் கற்பிதங்கள் அவ்வாறு தான் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை. அவை உண்மையின் அடிப்படையிலும் இருக்கலாம். சொல்லப்போனால் இக்கற்பிதங்கள் தங்களை "உண்மை" என்று கூறியே மக்களை ஈர்க்கிறது.

**ஏன் மறுசீரமைப்பு இவ்வாறு நடைபெறவேண்டும்? என்பதற்குக் காரணமாக நான் கருதுவது...**

**தொடர்ச்சி அடுத்த இதழில்...**

# PAGEVISION

Tel: 043 317 91 00, Fax: 043 317 91 02

www.pagevision.ch

உங்கள் கணினிசார் அனைத்து விதமான தேவைகளுக்கும் தயக்கமின்றி எம்மை நாடுங்கள்



ATX Standard Tower, 2x USB Front Anschluss, in 5 Farbvariationen erhältlich
Intel Pentium G4400, 2x 3.30GHz, Dual Core, 3MB Cache
Intel H110 Chipsatz, Gigabyte GA-H110M-DS2 Mainboard
8GB DDR4 Ram, Markenprodukt, 2133MHz
120GB SSD Laufwerk, 550MB/s lesen - 350MB/s schreiben
22x DVD-Brenner +/-/RAM Dual Layer
Kartenleser für alle Formate
8-Kanal Sound für Surround Systeme
10/100/1000Mbit Netzwerkanschluss für Netzwerke und Breitband-Internet
Windows 10 installiert und konfiguriert, inkl. DVD und Lizenz
21.5" Breitbild-Flachbildschirm, 5ms, integrierte Lautsprecher
kabellose Maus (optisch) und Tastatur

## PC Systems

**CHF 695.- inkl. MwSt**



AMD E-450 Dual Core Prozessor, 2x 1.66GHz
4GB DDR-3 RAM, Markenprodukt
400GB Festplatte, 8MB Cache, 5400RpM
DVD-Brenner Laufwerk, ±R/±RW/Dual Layer
AMD® A50M FCH Chipsatz
15.6" HD LED Display, spiegelnd, Auflösung 1366 x 768
ATI Radeon HD6310 Grafik integriert, bis 1469MB dynamisch
10/100Mbit Netzwerkkarte
integriertes Mikrofon und Lautsprecher
Gewicht 2.3kg inkl. Akku
300Mbit WLAN, UMTS optional
Schweizer Tastatur inkl. 10er Zahlenblock
374 x 250 x 14.3-34.1mm
Netzteil, Akku (Laufzeit 3-4.5h)
Windows 7 Home Premium, installiert und Konfiguriert, inkl. DVD und Lizenz

## Note Books

**CHF 499.- inkl. MwSt.**

## Reparaturen Aller Marken

Sehr Schnelle Lieferung!
Hauslieferungen
Vor-Ort Installationen
Netzwerklösungen für Firmen
Reparaturen aller Marken!

**iPhone Reparaturen**
www.iphonefan.ch

günstige gebrauchte Computer
Reparaturen aller Marken

**www.pckaufen.ch**

Tellstr.31, 8004 Zürich - Tel : 043 317 9101
Kirchgasse 33, 8302 Kloten - Tel : 044 500 22 22
Züricherstr. 99, 8406 Winterthur - Tel : 052 203 15 50
Rosengartenstrasse 4-8037 Zürich - Tel : 044 271 00 07

விவசாயம் என்பதும், குடிமக்கள் உணவுப் பஞ்சமில்லாமல் வாழ்வது என்பதும் ஒரு நாட்டின் அதிமுக்கிய பொருளாதாரக் கட்டமைப்பாகும். ஒரு நாட்டினுடைய விவசாயத் துறையின் வளர்ச்சிதான் அந்நாட்டை வல்லமை கொண்ட நாடாக உருவாக்கும். என்னதான் நவீன தொழில் நுட்பத்தில், அதி உச்ச நாடாக விருந்தாலும், விவசாயத்துறை நலியுமானால் முழு நாடுமே தள்ளாடத் தொடங்கிவிடும்.

ஒரு நாட்டினுடைய மண், அந்த நாட்டு மக்கள் உணவாக உட்கொள்ளும் பயிர் வகைகளை விளைவிக்கக்கூடிய, விவசாயத்திற்கு உகந்த மண்ணாக இருந்த போதிலும், உளவு நிறுவனங்களைச் சேர்ந்த வெளிநாட்டு விவசாய நிபுணர்கள், சுதேச விவசாய அதிகாரிகளின் துணையுடன், அந்த நாட்டு மண்ணில் அதிமுக்கியமான உணவுப் பயிர்கள் விளைவிக்கக் கூடிய சாத்தியம் இல்லையென அறிக்கை சமர்ப்பிப்பார்கள்.

விளைவிக்கக் கூடிய சாத்தியத்தை ஏற்படுத்துவதற்கு செலவழிக்கும் நிதியைவிட, அவ்வுணப் பொருட்களை, வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது, செலவைக் குறைக்கும் என ஆலோசனை வழங்குவார்கள். அந்த ஆலோசனையை உண்மையென நம்பிய அந்த நாடும், தம்மண்ணிலே விளைவிக்கக் கூடிய உணவுப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யத் தொடங்கும்.

இது அந்த நாட்டுக்கு பொருளாதார ரீதியான பின்னடைவுகளை ஏற்படுத்தும்.

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

பகுதி.18

- அவதானி





உணவு என்பது உயிர் வாழ்வதற்கான ஆதார சக்தியாகும். தமது நாட்டிலே விளைவிக்கக் கூடிய உணவுப் பொருட்களின் விளைச்சலில், அப்பொருட்கள் கொண்டுள்ள போசாக்குத் தன்மை பற்றியும், உடல் நலத்திற்கு கேடு விளைவிக்காத விதத்திலும் அவ்வுணவுப் பொருட்கள் மீது அதிக கண்காணிப்புக் கொண்டிருக்கும்.

ஒரு நாட்டினுடைய வளம் என்பது ஆரோக்கியமான, நோயற்ற மனித வளத்திலேயே தங்கி உள்ளது. நோய் கொண்ட மனிதர்களின் நோய்க்கான மருத்துவச் செலவுக்காக, ஒரு நாடு அதிகளவு நிதியை செலவழிப்பது மட்டுமல்ல, அடுத்தடுத்த பரம்பரையும் உடல் நலம் குன்றிய, ஆற்றலற்ற சமூகமாக மாற வாய்ப்புண்டு.

உடல் வளமும், மூளை வளமும் ஒரு மனிதனுக்கு மிகவும் முக்கியமானது. இந்த இரண்டும் சிறப்பாக இருந்தால் மட்டுமே, அந்த நாடு முன்னேற்றமடையும். நோய் கொண்ட மனிதர்களாக உருவாக்குவதில் உளவு நிறுவனங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிப் பொருட்களைப் பயன்படுத்துவார்கள்.

ஒரு நாட்டின் மண்ணில் ஒரு குறிப்பிட்ட பயிர்களை விளைவிக்க முடியாது என்று ஆலோசனையை வழங்கும் உளவு நிறுவனங்கள் எந்தெந்த நாடுகளிலிருந்து உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய வேண்டுமென்பதிலும், இறக்குமதி செய்யும் நிறுவனங்களுடன்






தொடர்புகளை ஏற்படுத்தி, இக்கட்டுரையின் முதற்பகுதிகளில் தெரிவித்தது போன்று ஒரு நாட்டினுடைய கட்டமைப்புகளைச் சிதைக்க பணம், பொருள், பெண் என்பவற்றை உளவு நிறுவனங்கள் எவ்வாறு பயன்படுத்துகின்றனவோ? அது போன்றுதான் வெளிநாட்டிற்கு உணவுப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நிறுவனங்களின் அதிகாரிகளை, அதிகாரிகளின் பலவீனங்களுக்கு ஏற்ப பயன்படுத்தும்.

உணவு என்பது உயிர்க் கவசம் மட்டுமல்ல, அது மருந்தும்கூட. உணவுப் பயிர்களின் விளைச்சலிருந்து கிடைக்கக்கூடிய உணவு, விளைச்சல் வேதியல் பொருட்களின் பாவனையற்று இருக்கும் போதுதான் அந்த உணவு உயிர்க் கவசமாகவும், மருந்தாகவும் இருக்கும்.

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களுடன் கலக்கப் பட்டிருக்கும் உயிர்க்கொல்லி வேதியல் பொருட்கள், உடனடியாக மரணத்தை ஏற்படுத்தாது. அந்த உணவை உண்ணும் மக்களை நோயாளிகளாக்கி, படிப்படியாக நோயினால் அவர்களை நலிவடையச் செய்து, இத்தகு உணவுப் பொருட்கள் மரணத்தை ஏற்படுத்தும்.

மனித உடல் வேதியல் பொருட்களினாலேதான் ஆக்கப்பட்டவை என்பதை இக்கட்டுரையின் முன்னைய தொடர்களில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், அவ்வேதியப் பொருட்கள் கூடினாலே, குறைந்தாலோ உடல் உறுப்புக்கள்



AKM

Alpenstr.1, 3072 Ostermundigen
Tel. 031 9312525 (Bern Nilavani)
Basel Str. 80, 6003 Luzern
Tel. 041 2405400

மலிவு எங்கும் கிடைக்கும் தரத்துடன் கூடிய இலாபம்..!

தமிழனின் வரலாற்றில்
மாபெரும் புரட்சி

இதய பூமியாம்
கிளிநொச்சியை மையமாகக் கொண்டு
தமிழரின் உழைப்பில் உற்பத்தியானது






உங்கள்
இனத்துக்கு உதவிய
திருப்தியுடன்
வாங்கிச்
செல்லுங்கள்!



AKM

முத்திரை பதித்த
அனைத்துப் பொருட்களையும்
ஒருமுறைச் சுவைத்தால்
ஈழத்துச் சுவை உங்கள் நாவில்
ஆழமான தனிச்சுவை தரும்..!

கிளிநொச்சி / முல்லைத் தீவு / யாழ்
மன்னார் மாவட்டங்களில் இருந்து
நீங்கள் வாங்கும் ஒவ்வொரு பொருளிலும்
ஒரு தமிழனின் துயர் துடைக்கும்

“விலை அல்ல எம் வாழ்வில் மகிழ்வைத் தருவது
தரம் மட்டுமே! நல் வாழ்வைத் தரும்

AKM Mani Face book page : AKM

அவற்றுக்கான தொழில்பாடுகளில் குறை கொண்டவையாகவே இருக்கும். அதற்குப் பெயர்தான் உடலுக்கு ஏற்பட்டுள்ள நோய் என மருத்துவ விஞ்ஞான ஆய்வுகள் நிறுவியுள்ளன.

இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருட்களுடன் கலக்கப்பட்டிருக்கும் வேதியல் பொருட்களின் தீமையை, இறக்குமதி செய்யும் நாட்டினால் வேதியல் ஆய்வு மூலம் கண்டுபிடிக்க இயலாது. உணவுப் பொருளில் அந்த வேதியல் பொருளின் கலப்பு, உணவுப் பொருள் கெட்டுப் போகாமலிருப்பதற்கான கலப்பு என அங்கீகாரத்தை, அதிகாரம் கொண்ட அதிகாரி கொடுத்து விடுவார்.

சிறிது சிறிதாக நோயை ஏற்படுத்தும் வேதியல் பொருட்கள் கலந்த இறக்குமதி செய்யப்படும் உணவை உண்ணும் ஒரு மனிதனின் மரபணுக்களின் வீரியம், படிப்படியாகக் குறைந்துவிடும். மரபணுக்களின் வீரியமே அவனின் அடுத்த சந்ததியின் உற்பத்திக்கான அத்திவாரமாகும். வேதியல் பொருட்கள் கலந்த உணவை உண்ணும் ஆணின் விந்திலும், பெண்ணின் கருமுட்டையிலும் அது பாதிப்பை ஏற்படுத்தும்.

ஆணின் விந்தணுக்கள் வீரியமற்றவையாக இருக்கும் போதும், பெண்ணின் கருமுட்டைகள் வீரியமற்றவையாக இருந்தாலும், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகள் வலிமையற்ற குழந்தைகளாக மட்டுமல்ல, விழிப் பார்வையற்றவர்களாகவும், உடல் உறுப்புக்களில் வளர்ச்சியற்றவர்களாகவும் இருக்க நிறையவே வாய்ப்புக்கள் உண்டு.

உளவு நிறுவனங்கள், ஒரு நாட்டைச் சிதைக்க எல்லா வழிகளையும் கையாள்வதற்கான பலமான வலைப்பின்னலை வைத்திருப்பார்கள். எந்த ஒரு உளவு நிறுவனமும், ஒரு நாட்டினுடைய சுதேச அதிகாரிகளின் உதவி இல்லாமல், அந்த நாட்டுக்குள் ஒரு போதுமே உளவு வேலை பார்ப்பதற்காக நுழைய முடியாது.


BEST PRICE

Milin Impex GmbH

IM

Indische Lebernsmittel GroBhandel

மலிவான தரமான மளிகைப் பொருட்களின் மொத்த, சில்லறை விற்பனையாளர்

எமது நிறுவனம் திங்கள் முதல் சனிக்கிழமை வரை
10:00 முதல் 18:00 மணி வரை திறந்திருக்கும்

எமது மலிவு விலைகளை அறிந்து கொள்ள....
www.milinimpex.de



Westendorf Str 41,
44287 Dortmund

Tel : 0231 459628 / 01725868366 info@milinimpex.de

CENTURY
TRAVELS GMBH

Emirates

Emirates Sommer 2018

**SRILANKA -COLOMBO**

**Direct Booking Nr.: 017621682149**

**ஜேர்மனியில் இருந்து கொழும்புக்கான சிறப்பு பயணச் சலுகை**

**2019ம் ஆண்டின் கோடைகால முன்பதிவுகள் ஆரம்பம்**



**Juli-2019 ab599€**

**அங்கத்தவர்களாக இணையும் வர்த்தகர்களுக்கு விசேட சலுகை (வி.ஐ.பி) உண்டு.**

**தொடர்புக்கு 0176 216 82 149**
(Gültig nur mit gewerbe ammeldung)

**Ram Nishanthan Dip. T.T.Mgt-IATA/UFTAA Montreal**

web : www.centurydravels.de email : info@centurytravels.de

**ஒருவருட Lebara Play அன்பளிப்பு**

5 விமானச் சீட்டுகள் வாங்கினால்
ஒரு வருட Lebara Play நீடிப்பு (Renewal)
கூப்பன் அன்பளிப்பாக வழங்கப்படும்

**Niederlassung**
Rheinische Str. 29
44137 Dortmund
Tel.: 0231 55 74 319
0231 58 96 557
0201 64888225
Fax : 0231 58 44 665

**Hauptsitz**
Steeler Str. 150
45139 Essen
Tel.: 0201 64 888 225
திங்கள் முதல் வெள்ளி வரை
காலை 9.30 முதல்
மாலை 3:30 திறந்திருக்கும்

# Radio - by - Phone

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
**00 49 231 700 977 60**

தொலைபேசி இலக்கத்தில்

**ஐரோப்பியத் தமிழ் வானொலி**

அழையுங்கள்!
வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

- 0221 9888014
- 01 80140659
- 044 5133032
- 0330 332 6349
- 0787 72527
- 6474969717
- 5149003078
- 7167480305
- 0280725194

ETR
ஐரோப்பிய தமிழ் வானொலி

15 YEARS ANNIVERSARY

மேலதிக விபரங்களுக்கு...

**www.etr.fm**